# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு III

பகுதி 1

Kerala Reader - Tamil
Standard III
Part - 1

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2024

ST-337-1-TAMIL-3-VOL-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 3

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

# முகவுரை

இயல்பாகவே குழந்தைகளிடம் மொழியாற்றல் உண்டு என்பது அறிஞர் பெருமக்கள் கருத்து. குழந்தைகள் தன்னிடம் பிறர் பேசுவதையும், பிறர் தங்களுக்குள் பேசிக் கொள்வதையும் உற்றுக் கவனிக்கும் ஆர்வமுடையவர்கள். அந்த ஆர்வமே அவர்களது மொழித் திறனை வேகப்படுத்துகிறது. மொழி நிலையில் ஒவ்வொரு நாளும் ஒரு வளர்ச்சிப் படிநிலையைக் காண இயலும். மொழி அவர்களிடம் வேகமாக வளர்கிறது என்றே சொல்லலாம்.

வல்லுநர்கள் தங்கள் விருப்பப்படிப் பாடங்களை நிர்ணயிக்கும் வழக்கம் இன்றில்லை. குழந்தைகளின் மனநிலையையும் ஆர்வத்தையும் அறிந்தே மொழிப்பாடங்களை உருவாக்கவேண்டும். இது குறித்து ஏராளமான ஆய்வுகள் நடந்துள்ளன. அத்தகைய ஆய்வுகள் முன்வைத்த ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளின் அடிப்படையிலேயே நாம் பாடநூல்களைப் படைத்துவருகின்றோம். மேலும், அறிவியல் வளர்ச்சிக்கும் சூழல் மாற்றங்களுக்கும் ஏற்பக் கற்றல் அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

சின்னக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்குச் சொல்லும் கருத்து எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கவேண்டும். ஆடிப் பாடத் தகுந்த பாடல்களையும், ஆர்வத்தோடு கேட்கத் தூண்டும் கதைகளையுமே அவர்கள் பெரிதும் விரும்புவர். பாடநூலை ஓர் அடித்தளமாகக் கொண்டு ஆக்கப்படும் அறிவு, சமூக நலனுக்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் பின்பற்றியே இப் பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

உங்கள் கற்றல் செயல்பாடுகள் கற்கண்டாய் இனிக்கட்டும்!

வாழ்த்துகள்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - III (Part 1)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Helen Japa Rose, S.L.**
Asst. Professor in Tamil, Govt. College, Munnar, Idukki

### Experts

**Dr. Kumar, S.**
Asst. Professor in Tamil, Govt. Training College, TVPM.

**Dr. Eswaran, P.**
Asst. Professor in Tamil, Govt. College, Munnar, Idukki

**Dr. Kumaraswamy, S.**
Prof. in Tamil (Rtd.) Vivekanantha College, Kanniyakumari.

### Members

**Anishkumar, A.**, LPST, MAILPS, Murukady, Kumily, Idukki.
**Eswaran, T.**, LPST, ALPS, Luckham, Munnar, Idukki.
**Gnana Jeyaseelan, G.**, HM, ALPS, Luckham, Munnar, Idukki.
**Jayachandra Kumar, T.**, PD Teacher, GLPS, Ayinkamam, Parasala, TVPM.
**Nagendran, S.**, HM, Govt. UPS, Kalaar, Munnar, Idukki.
**Pushparaj, G.**, LPSA, ALPS, Pullivasal, Munnar, Idukki.
**Ragupathi, M.**, HM, GTLPS, Champakad, Munnar, Idukki.
**Russel Raj, R.**, **(**Rtd.) HM, ALPS, Pullivasal, Munnar, Idukki.
**Sandra Raj, T.**, LPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Sujathakumari, N.**, LPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Aparna Giri, R.,** Chackai, Thiruvananthapuram.
**Arya S Rajeev.,** Kariyam, Poudikonam, Thiruvananthapuram.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Sarath Prem**, Praveena, Kilimanoor, Thiruvananthapuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

அலகு 1 நானின்றி நீயில்லை ........ 7 - 24

- உன்னால் வாழ்கிறோம் ........ 8 - 13
- ஒப்பில்லாக் காட்சிகள் ........ 14 - 18
- வளர்ப்போம் வளம் பெறுவோம் ........ 19 - 24

அலகு 2 ஊசியின்றி உயிர் வாழ்வோம் ........ 25 - 38

- உண்டு மகிழ! ........ 26 - 29
- நலம்! நலமே விளைக! ........ 30 - 34
- நூறு வயது வாழ...! ........ 35 - 38

அலகு 3 ஆடுவோம்! பாடுவோம்! ........ 39 - 56

- பொங்கலோ பொங்கல் ........ 40 - 45
- ஆவணியும் பூவணியும் ........ 46 - 51
- சிரிக்கும் மத்தாப்பு ........ 52 - 56

அலகு 4 காலத்தின் அருமை ........ 57 - 69

- விண்ணும் மண்ணும் ........ 58 - 61
- காலப் பயிர் ........ 62 - 64
- காலம் பார்த்து....! ........ 65 - 69

அகரமுதலி ........ 70

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

## அலகு 1
# நானின்றி நீயில்லை



உயிரினங்களின் வாழ்வாதாரமாக விளங்கும் குளம், ஆறு, ஏரி, கடல், காடு, மலைகள் யாவும் எழில் கொஞ்சும் இயற்கை வரங்கள்.

# உன்னால் வாழ்கிறோம்




## பார்த்து வந்தேன்

மலையிற் பிறந்து வரும் ஆறே!
வழியில் எதை எதைப் பார்த்துவந்தாய்?
மலையில் இருந்து வருகையிலே
மலையின் இடுக்கைப் பார்த்தாயோ?

குலைகுலை யாகப் பொற்கொன்றைக்
குளிர்மலர் கொண்டு வந்தாயோ?
கலையோ டாடும் பெண்மானின்
காட்டைக் கடந்து வந்தாயோ?

இலையும் பூவும் குளிர்காவும்
எங்கெங் குண்டு சொல்வாயோ?
குலைகுலை யாகச் செவ்வாழை
முக்கனி கொண்டு வந்தாயோ?

செந்நெல் வயலில் நுழைந்தாயோ?
திருக்குளம் புகுந்து வந்தாயோ?
கன்னற் காட்டைக் கண்டாயோ?
காலாற் கடந்து சென்றாயோ?



கற்கள் உருட்டி வந்தாயோ?
கழனிக் குணவைத் தந்தாயோ?
மக்கள் வாழாப் பாலையிலும்
வந்தாய்! குளிர்மை தந்தாயோ?

ஏழை எளியோர் எண்ணாமல்
எவர்க்கும் குளிர்மை தந்தாயே!
தாழை போர்த்த கடலோரம்
வந்தாய்! கலந்தாய்! தணிந்தாயே!

தடுத்த அணையைச் சினந்தாயோ?
தமிழர் போலத் தணந்தாயோ?
கொடுத்தே உதவி வாழ்வதில்தான்
குளிர்மை உண்டெனக் கண்டாயோ?

பொன்னை விளைக்கும் சிற்றூரும்
புகையைக் கக்கும் பேரூரும்
உன்னால் வாழ்தல் கண்டோமே!
உன்னை வாழ்த்து கின்றோமே!

– கவிஞர் வாணிதாசன்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலை வாசித்துப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்.
- முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

  எ.கா : மலையில், மலையின்

  ..................................................

  ..................................................

- இரண்டாம் எழுத்து ஒரேபோன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

  எ.கா : குலை, மலை

  ........................................................

  ........................................................

- ஆறு கடந்து வந்த பாதையில் அது பார்த்தவற்றை எழுதுங்கள்.
  - 
  - 
  - 
  - 

சரியானவற்றை எடுத்து எழுதுங்கள்

1. நான் ம........... (லை/ளை ) களி........... (ல் /ழ்) பா...........(ரை / றை) களில் குதித்து வி........... (ழை / ளை ) யாடி அ........... (று /ரு ) வியாக வி...........(லு /ழு) ந்து த...........(ரை / றை) யில் ஓடுவது க........... (ன்/ண் ) கொள்ளாக் காட்சியாகும்.

## கிணற்றுக்குள் வைர மோதிரம்

அந்த ஆண்டுக் கோடைக்காலம் மிகக் கடுமையாக இருந்தது. ஆறுகள், குளங்கள், கிணறுகள் வற்றிப் போயின. செடி, கொடிகள் வாடி வதங்கின. நண்பகலில் தெருக்கள் வெறிச்சோடிப் போயின. வெயிலுக்குப் பயந்து மக்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

ஒரு நாள் அதிகாலையில், மாமன்னர் அக்பர், சில அதிகாரிகள் புடைசூழ வெளியே உலாவக் கிளம்பினார். மன்னரின் முக்கிய ஆலோசகர் பீர்பாலும் அவர் கூடவே சென்றார். அக்பர் கோடையின் கொடுமையைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்தார். அவர்கள் செல்லும் வழியில் ஒரு கிணறு தென்பட்டது. அதைப் பார்த்த அக்பர், "தலைநகரில் உள்ள கிணறுகள் யாவும் வற்றி விட்டன என்று கேள்விப்பட்டேன். இந்தக் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டே அதன் அருகில் சென்று குனிந்து பார்த்தார்.

"இது மிகவும் ஆழமான கிணறு. அடியில் தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்றே தெரியவில்லையே" என்றார் அக்பர். அதைக் கேட்ட பீர்பால், "பிரபு! தண்ணீர் இருக்கிறதா என்று அறிய ஒரு கல்லைத் தூக்கிப் போட்டால் தெரிந்து விடுமே! தண்ணீர் இருந்தால் கல்பட்டுத் தெறிக்கும்," என்று சொல்லிவிட்டு,





கிணற்றினுள் ஒரு கல்லை எறிந்தார். கல் அடியில் சென்று விழுந்த ஒலியைக் கேட்டதுமே, கிணறு முற்றிலும் வற்றியுள்ளது என்று தெரிந்தது.

"பீர்பால்! கிணற்றினுள் ஒற்றைக் கல்லாகப் போடக் கூடாதென்று சொல்லுவார்கள்.... அதனால் இன்னொரு கல்லை நான் போடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, தன் விரலில் இருந்த ஒரு வைரமோதிரத்தைக் கிணற்றினுள் போட்டார் அக்பர். அப்போது சுற்றியிருந்த அனைவரும் திகைத்துப் போயினர்.

"பிரபு! வைரமோதிரத்தை ஏன் போட்டீர்கள்?" என்று பீர்பால் கேட்க, "வைரமும் ஒரு கல்தானே! அதனால்தான் போட்டேன்" என்றார் அக்பர். "ஆயினும் கல்லெல்லாம் வைரக்கல்லாகுமா? நீங்கள் செய்தது சரியா?" என்று பீர்பால் கேட்டார்.

"அதனால் என்ன, பீர்பால்! யாரையாவது கிணற்றில் இறங்கச் சொல்லி மோதிரத்தை எடுத்து விட்டால் போகிறது!" என்றார் அக்பர். "கிணற்றுக்குள் இறங்கினால் யார் வேண்டுமானாலும் மோதிரத்தை எடுத்து விடலாம். ஆனால் யாராவது கிணற்றுக்குள் இறங்காமலே அந்த மோதிரத்தை எடுக்க முடியுமா?" என்றும் கேட்டார்.

"முடியவே முடியாது, பிரபு!" என்றார் கூட இருந்த பிரமுகர் ஒருவர். "முடியாதது என்று ஒரு காரியமும் இல்லை. முயன்று பாருங்களேன்" என்று அக்பர் சொல்ல, "பிரபு! அது யாராலும் செய்ய முடியாத காரியம்" என்றார் அதே பிரமுகர். மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

"பீர்பால்! நீ என்ன நினைக்கிறாய்?" என்று அக்பர் கேட்க, "அதைப் பற்றித்தான் நானும் யோசிக்கிறேன்" என்ற பீர்பால், தன் தலைப்பாகையை அவிழ்த்துவிட்டுத் தனது தலையைச் சொறிந்தார். "தலையைச் சொறிந்தால் மட்டும் யோசனை தோன்றிவிடுமா?" என்று ஓர் அதிகாரி பீர்பாலை நோக்கி



ஏளனத்துடன் கேட்டார். "தலையைச் சொறிந்தால் எனக்கு நல்ல யோசனை தோன்றும். ஆனால் உங்களுக்குத் தோன்றாது!" என்று பீர்பால் கூறினார். "எனக்குத் தோன்றாது, ஆனால் உனக்குத் தோன்றுமோ? அது எப்படி?" என்று அந்த அதிகாரி கேலியாகக் கேட்க, "எனக்கு மூளை இருக்கிறது. அதனால் தலையைச் சொறிந்ததால் மூளை வேலை செய்யும். ஆனால் உங்களுக்கு என்ன செய்தாலும் யோசனை தோன்றாது" என்று பீர்பால் அவனுக்குப் பதிலடிக் கொடுத்தார். "பிரபு! எனக்கு யோசனை தோன்றிவிட்டது!" என்று பீர்பால் உற்சாகத்துடன் கூற, "அப்படியா? நீ எப்படி மோதிரத்தைக் கிணற்றுக்குள் இறங்காமலே எடுப்பாய்?" என்று ஆர்வத்துடன் அக்பர் கேட்டார். நாளைக் கூறுகிறேன் என்று பீர்பால் கூறினார். அக்பர் அரசவைக்குச் சென்றார்.


பீர்பால் கிணற்றுக்குள் கிடந்த வைர மோதிரத்தின் மீது சிறிது சாணியைப் போட்டார். பின்பு ஒரு நூலை எடுத்து அதன் ஒரு





முனையில் ஒரு கல்லைக் கட்டினார். நூலின் மறுமுனையைக் கிணற்றுக்கருகே இருந்த ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டினார். பிறகு, வைரக்கல்லைக் குறிபார்த்து ஏற்கெனவே கிணற்றின் உள்ளே இருந்த சாணியின் மீது கல்லை வீசியெறிந்தார். கல் சரியாகச் சாணியின் மீது விழுந்தது.

தன்னுடைய வேலைக்குத் தானே ஒரு சபாஷ் போட்டுக் கொண்டார். பின்னர், அங்கிருந்த காவலர்களிடம் அதைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு பீர்பால் வீடு திரும்பினார். உணவருந்தி விட்டு நிம்மதியாகத் தூங்கினார். பிறகு மாலையில் எழுந்து கிணற்றை நோக்கிச் சென்றார். காலையில் அவர் வீசியெறிந்த சாணி வெயிலில் நன்றாகக் காய்ந்து உலர்ந்திருந்தது. அதன் மீது அவர் வீசிய கல்லும் நன்றாக ஒட்டிக் கொண்டிருந்தது. பிறகு பீர்பால் மிக நிதானமாகவும். கவனமாகவும் நூலைப்



பிடித்து மேலே இழுக்க, கல் கிணற்றுக்குள் இருந்து மேலே வந்துவிட்டது. கல்லில் ஒட்டிய சாணியும் உலர்ந்து போய் அதனுடன் சேர்ந்து பத்திரமாக இருந்தது. அதிலிருந்து மோதிரத்தை எடுத்து, சுத்தமாகக் கழுவியபின், பீர்பால் அரண்மனை தர்பாருக்குச் சென்றார்.

அந்த நேரத்தில் அக்பர் தர்பாரில் தன் அதிகாரிகளுடன் அமர்ந்திருந்தார். அவரை வணங்கிய பீர்பால், "பிரபு! நான் வெற்றிகரமாகத் தங்கள் மோதிரத்துடன் வந்திருக்கிறேன்" என்றதும் அக்பருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"கிணற்றுள் இறங்காமலேயே மோதிரத்தை எடுக்க உன்னால் எப்படி முடிந்தது?" என்று அக்பர் ஆவலுடன் கேட்டார். அதற்கு "மூளையைப் பயன்படுத்தினால் முடியாதது ஒன்றுமில்லை என்று நீங்கள் சொன்னதை நிரூபித்து விட்டேன்" என்று கூறிய பீர்பால், தான் மோதிரம் மீட்டதை விளக்கிக் கூறினார். "பலே! சபாஷ்! உன்னைப் போல் புத்திசாலியை நான் பார்த்ததே இல்லை!" என்று பாராட்டிய அக்பர், பொற்காசுகள் நிரம்பிய பையைப் பீர்பாலுக்குப் பரிசளித்தார்.

– பீர்பால் கதைகள்

## செயல்பாடுகள்

- பீர்பால் வைரமோதிரத்தை எவ்வாறு வெளியே எடுத்தார் என்பதைப் பாடப்பகுதியை வாசித்துக் கூறுங்கள்.
- ஆறுகள், கிணறுகள் வற்றிப் போவதால் ஏற்படும் தீமைகளைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- கீழ்வரும் சொற்களுக்கு இரு பொருள் எழுதுங்கள்.
    - ஆறு – .......................... ..........................
    - கல் – .......................... ..........................



# ஒப்பில்லாக் காட்சிகள்




## கடலின் ஆழம்

காட்டை விட்டுக் குள்ள நரியும்
வெளியில் வந்ததாம்.
கடலைப் பார்க்க வேண்டு மென்றே
ஆசை கொண்டதாம்.

காற்று வீசும் கடற் கரைக்கு
வந்து சேர்ந்ததாம்.
கரையில் நின்ற படியே கடலை
உற்றுப் பார்த்ததாம்.

"கடலின் ஆழம் என்ன வென்றே
எனது பாட்டனார்
கதைகள் சொல்லும் போதே எனக்குச்
சொல்லியிருக்கிறார்.

கடலின் ஆழம் என்ன வென்றே
இந்த நேரமே
கணக்காய் நானும் அளந்து சொல்வேன்"
என்று ரைத்ததாம்



தண்ணீர் அருகே சென்று நரியும்
நின்று கொண்டதாம்
தனது வாலை மெள்ள மெள்ள
உள்ளே விட்டதாம்



தண்ணீருக்குள் வாலை முழுதும்
விட்ட வுடனேயே
தரையும் அந்த வாலின் நுனியில்
தட்டுப் பட்டதாம்.

"கடலின் ஆழம் எனது வாலின்
நீளம் தானடா !
கண்டு பிடித்து விட்டே" னென்று
துள்ளிக் குதித்ததாம்



"அடடா, மிகவும் ஆழம் என்று
சொல்லும் கடலையே
அளந்து விட்டேன்" என்றே பெருமை
அளக்க லானதாம்!

அழ. வள்ளியப்பா

## செயல்பாடுகள்


- பாடலின் கருத்தைக் கூறுங்கள்.
- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலில் இடம் பெற்ற கதையைச் சொல்லுங்கள்.
- கீழே கொடுத்துள்ள படத்திற்குப் பொருத்தமான வாக்கியங்களை எழுதுங்கள்.



..............................................



..............................................



..............................................



..............................................

## பாடும் இறகு

அது ஒரு கடற்பறவை. இனிமையாகப் பாடும் திறன் பெற்றிருந்தது. ஆனால் அந்தப் பாட்டு அதன் அலகிலிருந்து வந்ததல்ல; அதன் இறகிலிருந்து வந்தது. அப்படி இருக்கும் போது, ஒரு ஆபத்து ஏற்பட்டது. ஒரு நாள் கடற்பறவை கடற்கரைக்கு மேலாகப் பாட்டுப்பாடி பறந்து கொண்டிருக்கும்போது, அதன் இறகு ஒன்று உதிர்ந்து கீழே விழுந்து விட்டது! அத்துடன் அது பாடுவதற்கான திறமையை இழந்துவிட்டது. தன் இசைத் திறமை கைவிட்டுப் போனதை அறிந்த கடற்பறவை மிகவும் துயரத்துடன் இலக்கற்றுப் பறந்து அலைந்து கொண்டிருந்தது.

பாடும் கடற்பறவையிடமிருந்து உதிர்ந்த புனிதமான இறகு யாருக்குக் கிடைத்தது? கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த ஸெர்வோய் என்ற பையனுக்குக் கிடைத்தது. அந்த இறகின் சிறப்பம்சம் என்னவென்று அவனுக்குத் தெரியாது. ஆயினும் அதன் மீது அவனுக்கு ஓர் ஆர்வம் ஏற்பட்டது. அவன் அந்த இறகைக் கையில் பிடித்துக் கொண்டு கடற்கரைக்கு ஓடினான். அப்போது இறகிலிருந்து இனிமையான பாடல் ஒலித்தது! அது நாற்புறமும் பரவி எதிரொலித்தது.



இறகு தொலைந்த துயரத்தில் பறந்துகொண்டிருந்த அந்தக் கடற்பறவை, தான் இழந்த பாடலை மீண்டும் கேட்டது. அது ஆவலுடன் பறந்து, அந்தப் பாடல் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடித்தது. ஒரு சிறுவன் தன் இறகைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடுவதையும் இறகிலிருந்து பாடல் ஒலிப்பதையும் பார்த்துப் பறவை வியந்தது. எப்படியாவது அந்த இறகைத் திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்று முடிவு செய்து அந்தப் பையனிடம் சென்றது. தன்னை நோக்கி ஒரு பறவை வருவதைப் பார்த்து ஸெர்வோய் திகைப்படைந்தான். கடற்பறவை அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்று கேட்டது,

"அன்பிற்குரிய பையனே, நீ யார்? இந்த இறகு உனக்கு எப்படிக் கிடைத்தது?"

அவன் உற்சாகத்துடன் சொன்னான்:

"என் பெயர் ஸெர்வோய். கடற்கரை மணலில் விளையாடுவதிலும் அலைகளை எண்ணுவதிலும் எனக்கு நெடு நாட்களாகவே ஆர்வம் உண்டு. அப்படி இங்கே வந்தபோது எதிர்பாராமல் இந்த இறகு எனக்குக் கிடைத்தது.

அதைக் கேட்ட கடற்பறவை,

"நண்பா, இந்த இறகு என்னுடையது. இந்த இறகு கிடைத்ததால் நீ மிகவும் மகிழ்ச்சி அடைகிறாய். இந்த இறகை இழந்ததால் நான் பன்மடங்கு துயரத்தை அனுபவிக்கிறேன். இந்தப் பாடும் இறகு என் உடலில் இருந்தால் அப்புறம் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. இந்த இறகு இல்லையென்றால் எனக்கு உயிர் போனதுபோல ஆகிவிடும். தயவுசெய்து எனக்கு இந்த இறகைத் திருப்பித் தந்து விடுகிறாயா?" கெஞ்சிக் கேட்டது கடற்பறவை.

ஸெர்வோய் மனம் இரங்கினான். அவன் உடனே அந்த இறகைக் கடற்பறவையிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, வீட்டுக்குச் சென்றான். கடற்பறவை உதிர்ந்த இறகை மீண்டும் தன் உடலில் பொருத்திக்கொண்டு பறந்து உயர்ந்தது.

இனிமையான பாடல் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது. கடற்பறவை மகிழ்ந்தது.

– ரஷ்ய சிறார் கதைகள்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை நன்கு வாசியுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- இந்தப் பாடப்பகுதியில் உங்களுக்கு மிகவும் பிடித்த பகுதியைச் சத்தமாக வாசியுங்கள்.
- பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து எடுத்து எழுதுங்கள்.
    - கடற்பறவை இழந்தது .......................... (இறகு /இரகு)
    - கடற்பறவை ஆவலுடன் ..................(பறந்தது/ பரந்தது)
    - கடற்பறவை ...................... பறந்தது (தாள்ந்து / தாழ்ந்து)
    - இறகு ஒன்று .......................... விழுந்தது (கீலே / கீழே)
    - சிறுவன் கடற்கரையில் .............. (ஓடிணான் /ஓடினான்)

## கன்னிக்கடல்





கன்னிக் கடலருகே அழகாய்
காணும் கரைதனிலே
மின்னும் மணற்பரப்பில் குழந்தாய்
மெல்ல இருந்திடம்மா

மன்னிய ஆலயமும் அருகே
மன்னவர் மாளிகையும்
உன்னத மாமதிலும் குழந்தாய்
ஒப்பில்லாக் காட்சியம்மா

சிந்தூரம் வைத்தகலம் உடைந்து
சிந்திச் சிதறுதல் போல்
அந்தி தரும் விசும்பு குழந்தாய்
அற்புதக் காட்சியம்மா!

கோவில் மணி முழங்க மக்கள்
கூட்டம் கலையுதம்மா
ஆவலாய் வீடு செல்வோம் குழந்தாய்
அந்தி இருளுதம்மா!

– கோட்டாறு மகாவித்வான் தேசிகவிநாயகம் பிள்ளை

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- கடலிலிருந்து என்னென்ன கிடைக்கின்றன?
- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடற்கரைக் காட்சிகளை எழுதுங்கள்.



# வளர்ப்போம் வளம் பெறுவோம்



## எங்கும் பசுமை

வீசும் காற்று தூய்மையாய்
வேண்டும் என்று விரும்பினால்
வீட்டைச் சுற்றி சுத்தமாய்
வைத்துக் கொள்ள வேண்டுமே

வெயிலின் கொடுமை குறையவே
வீதி யெல்லாம் விருப்பமாய்
நிழலைத் தரவே மரங்களை
நிறைய வளர்க்க வேண்டுமே

மழையும் பெய்து நாட்டிலே
மண் குளிர்ந்து வளம் பெற
தழைத்து நிற்கும் தாவரம்
தன்னை வெட்டக் கூடாதே

கடவுள் தந்த நன்மைகள்
காத்து வாழ்ந்தால் யாருக்கும்
இடரெதுவும் வாரா தாம்
எங்கும் பசுமை இனிமையே

– பூவை அமுதன்

## செயல்பாடுகள்

- பாடலின் கருத்தைச் சொல்லுங்கள்.
- கவிதையில் முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- பாடலில் உங்களை மிகவும் கவர்ந்த நான்கு வரிகளைக் கூறுங்கள்.
- சொல்லி மகிழ்வோம்.

1. ஓடற நரியில் ஒரு நரி கிழநரி
   கிழநரி முதுகில ஒரு பிடி நரமுடி

2. சரக்கு ரயிலைக் குறுக்கு வழியில் நிறுத்த
   நினைத்த முறுக்கு மைனர் சறுக்கி விழுந்தும்
   முறுக்கு மீசை இரங்கல

## மரம்வெட்டி மாடசாமி!

ஓர் ஊரில் மரம்வெட்டி மாடசாமி என்று ஒருவர் இருந்தார். அவர் எப்போதும் மரங்களை வெட்டிக்கொண்டே இருப்பார். கேட்டால் "வயிற்றுப் பிழைப்புக்காகத்தானே" என்பார்.


மாடசாமிக்கு ஒரு மகன் இருந்தான், அவன் பெயர் மாணிக்கம். அவன் பக்கத்து ஊரில் இருக்கும் தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்புப் படிக்கிறான். தினமும் தன் நண்பர்களோடு நடந்தே



பள்ளிக்குச் செல்வான். மதிய நேரம் தன் அம்மா கொடுத்த உணவை நண்பர்களோடு பகிர்ந்து சாப்பிடுவான். மாலையில் பள்ளி முடிந்ததும் நண்பர்களோடு வீடு திரும்புவான்,

மாடசாமி மரங்களை வெட்டுவது மாணிக்கத்துக்கு வருத்தமாக இருக்கும். அவர் தனது தேவைக்கும் அதிகமாகவே மரங்களை வெட்டித் தள்ளுவது அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அப்பா, இப்படி மரங்களை வெட்டாதீர்கள்; 'மரங்கள் இருந்தால் தான் மழை பெய்யும்' என்பான் மாணிக்கம்.



அன்று பள்ளியில் மரம் நடும் விழா நடந்தது. ஆசிரியர்களின் உதவியால் தன் நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு நிறைய மரக் கன்றுகளை நட்டான் மாணிக்கம். அவன் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. அன்று மதிய இடைவேளைக்குப் பிறகு, வானம் இருட்டிக் கொண்டு மழை பெய்ய ஆரம்பித்தது. இடியுடன் கூடிய பலத்த மழை! சீக்கிரமே பள்ளி முடிந்துவிட்டது. மாணவர்கள் நனைந்து கொண்டே ஓட்டமும் நடையுமாக வந்தார்கள். வழியில் இருந்த சிறு நீரோடையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இருட்டிவிட்டது. சற்று பெரிய மாணவர்கள் நீந்தி வீடு வந்து சேர்ந்தார்கள். மாணிக்கம் மட்டும் வரவில்லை, அவன் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டதை வீட்டில் போய்ச் சொன்னார்கள் மாணவர்கள்.

மாடசாமியும் அவர் மனைவியும் விளக்குடன், மாணிக்கத்தைத் தேடிக் கிளம்பினார்கள். சரியான இருட்டு, எங்குத் திரும்பினாலும் தண்ணீர். தூரத்தில் கருமையாக நின்றிருந்த ஒரே ஒரு மரத்தைக் கண்டார் மாடசாமி. அது சிறிய மரம் என்று அவர் வெட்டாமல் விட்ட மரம். பக்கத்தில் சென்றதும் பதறிப் போனார். அந்த மரத்தைத் தன் பிஞ்சுக் கைகளால் அணைத்தபடி அரை மயக்கத்தில் இருந்தான்

மாணிக்கம். பயத்தில் நடுங்கிக்கொண்டு இருந்தான். அந்தச் சிறு மரத்தால் தான் தனது மகன் காப்பாற்றப்பட்டான் என்பதை மாடசாமி உணர்ந்தார்.

வீட்டுக்கு வந்தபின், "அந்த மரம்தான் என்னைக் காப்பாற்றியது.



இனிமேலாவது மரங்களை வெட்டாதீர்கள்" அப்பா என்றான் மாணிக்கம்.

அன்று முதல் மாடசாமி மரத்தை வெட்டுவதே இல்லை. வயலில் வேலை செய்து வாழ்ந்து வருகிறார்.

– முத்து

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- நீங்கள் மழையில் சிக்கிய நிகழ்வைச் சொல்லுங்கள்.
- கதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களை எழுதுங்கள்.

  1.

  2.

  3.

  4.
- 'மரம் வெட்டக் கூடாது' என மாணிக்கம் கூறக் காரணம் என்ன? எழுதுங்கள்.
- மாடசாமியின் மனம் மாற்றத்திற்குக் காரணமாக இருந்த நிகழ்வை எழுதுங்கள்.

## மரங்கள் வரங்கள்

ஒருநாள் முதியவர் ஒருவர் மருந்துக்குத் தேவையான மூலிகைகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார். களைப்பு மிகுதியால் ஆலமர நிழலில் அவர் படுத்து உறங்கி விட்டார். உறக்கத்தில் ஒரு கனவு.



சுற்றிலும் பலவகையான மரங்கள்! அவை தமக்குள் யார் சிறந்தவர் என்று சண்டையிட்டுக் கொண்டு முதியவரிடம் வந்தன; தங்கள் பெருமைகளை எடுத்துக் கூறின.

ஐயா, என்னை நாடி வந்த அனைவருக்கும் நிழல் கொடுக்கிறேன். பறவைகளுக்கு உணவும், வீடும் தருகிறேன். எனவே என் பணிதானே சிறந்தது? என்றது ஆலமரம்.



ஐயா, என்னிடம்தானே அதிக மருத்துவக்குணம் உள்ளது? இலையும் விதையும் பட்டையும் கூட மருந்துகள்தாமே! மரப்பொருட்கள் செய்யவும் பயன்படுகிறேன். எனவே என் பயன்தானே சிறந்தது? என்றது வேப்பமரம்.



ஐயா, என்னுடைய இலை, பூ, காய், தண்டு, நார் என அனைத்துப் பகுதிகளையும் மக்கள் பயன்படுத்துகின்றனர். எனவே என் பயன் தானே சிறப்பானது? என்றது வாழைமரம்.



என்னிடமிருந்து இளநீர், தேங்காய், கீற்று, மட்டை, நார், பன்னாடை போன்ற பொருட்கள் மக்களுக்குக் கிடைக்கின்றன. நான் உணவாக, எண்ணெயாக, தீவனமாக, உரமாக, விறகாக, கயிறாக, துடைப்பமாக உருவாகிறேன். அப்படியானால் என் பயன்தானே சிறந்தது? என்றது தென்னைமரம்.

உங்களுக்குள் வீணாகச் சண்டை போட்டுக் கொள்ளாதீர், நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்பு மிக்கவர்கள்தான். நீங்கள் வெறும் மரங்கள் அல்ல. இயற்கை இந்தப் பூமிக்குத் தந்த வரங்கள் என்று சத்தமாகக் கூறினார் முதியவர்.

சற்று நேரத்தில் முதியவர் கனவு கலைந்து எழுந்தார். சுற்றிலும் மரங்களைப் பார்த்தார். தனக்குள் சிரித்துக்கொண்டார். மீண்டும் மூலிகைகளைச் சேகரிக்கத் தொடங்கினார்.

## செயல்பாடுகள்

- படக்கதையை வாசியுங்கள் கருத்தைக் கூறுங்கள்
- மரம் தன் சிறப்புகளைக் கூறுவது போல் சொல்லுங்கள்.
  - ஆலமரம்
  - வேப்பமரம்
  - வாழை மரம்
  - தென்னைமரம்
- நீங்கள் மரங்களாகவும் முதியவராகவும் மாறி கதையை நடித்துக் காட்டுங்கள்.
- படக்கதையை வாசித்து மரங்களின் பயன்களை எழுதுங்கள்.

| | |
|---|---|
| ஆலமரம் | ........................................ ........................................ |
| வேப்பமரம் | ........................................ ........................................ |
| வாழை மரம் | ........................................ ........................................ |
| தென்னை மரம் | ........................................ ........................................ |



## அலகு 2

# ஊசியின்றி உயிர் வாழ்வோம்



'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற ஆன்றோர் பழமொழிக்கு ஏற்ப ஒவ்வொரு மனிதனும் நோயின்றி வாழ முயல வேண்டும். நோயின்றி வாழ உடற்பயிற்சியும் ஊட்டச்சத்துள்ள உணவுகளும் சரியான உணவுப்பழக்கமும் முக்கியமானவை ஆகும். இவற்றைக் கடைப்பிடித்தால் ஆரோக்கியமுள்ள எதிர்காலம் உருவாகும்.

ST-337-4-TAMIL-3-VOL-1

# உண்டு மகிழ....!




## சீர் உணவு

கம்பங் கூழை நாள்தோறும்
காலை வேளை அருந்திட்டால்
தெம்பாய் நீயும் இருந்திடலாம்;
தேக வலிமை பெற்றிடலாம்;
சோளத் தோசை சாப்பிட்டால்
சுறுசுறுப்பாய் இருந்திடலாம்;
நாளம் தன்னில் வலுவேற்றி
நன்மை செய்யும் கேழ்வரகு;

சாமை வரகு சாதத்தில்
சத்துகள் தாம் ஏராளம்;
தீமை செய்யாத் தானியங்கள்
தினையும் குதிரை வாலியும்தாம்!
அரிசி கோதுமையாவும்
அதிக நலனைத் தரா.
துரித உணவோ நோய்களுக்குத்
துணையா யாகும் அறிந்திடுக;

சீராய் உடலைக் காக்கின்ற
சிறுதா னியங்கள் உண்போர்க்கு
வாரா தெந்த நோயும்தான்;
வலிமை யாக உடல்வளரும்;
நமது நாட்டின் தானியமே
நன்மை செய்யும் நல்லுணவாம்
அமர்ந்தே ஆய்ந்த அறிவியலின்
அண்மைக்கால உண்மையிதாம்!

கே. பி. பத்மநாபன்

## செயல்பாடுகள்

- பாடலில் வரும் தானியங்களின் பெயர்களை எழுதுங்கள்.
- பாடல் வரிகளை நிரப்புங்கள்.

கம்பங்கூழை ...........................................................

காலை ...........................................................

சத்துகள் ...........................................................

- எனக்கு எதிர் யார்? இணையுங்கள்.

| | | |
|---|---|---|
| • நன்மை | × | பெரிய |
| • ஏராளமான | × | தீமை |
| • சிறிய | × | குறைவான |

## இயற்கை உணவு

"செல்வி! நான் பெரியய்யா வீடு வரைக்கும் போய் வருகிறேன்" கந்தசாமி கிளம்பினான். அந்த ஊரின் பணக்காரரான இரத்தினசபாபதியின் நிலங்களைக் கந்தசாமிதான் பயிரிட்டு மேற்பார்வை பார்த்து வந்தான். நிலத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணிப் பயிரிட விளைச்சல் அமோகமாக இருந்தது. அதனால் அவனுக்கு அவர் வீட்டில் தனி பிரியம். அவனைக் கண்டதும் இலட்சுமி அம்மா "வாப்பா கந்தசாமி! சற்று முன்னர் தான் ஐயாவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்... கந்தசாமி கையால் விளைகிறவை எல்லாம் அவ்வளவு ருசின்னு... அரிசி உணவைத் தவிர எதுவும் தொடாத பிள்ளைகள் இப்போது கோதுமை, சோளம் சிறுதானிய உணவுகளை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். முன்னால் வேண்டாததை எல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்போது

ஒழுங்காகச் சத்துள்ள உணவைச் சாப்பிடுகிறார்கள். எல்லாப் பெருமையும் உனக்குதான். காலை உணவு கூட நீ கொண்டு வந்த பச்சைக் கடலையும் சோளமும் வேக வைத்தது தான்.. பட்டணத்துல சாப்பிட்ட பிள்ளைகள் இங்கு வந்து இதன் ருசியைப் பார்த்து விட்டு இதுதான் பிடித்துள்ளது என்று சொல்லுகிறார்கள்", என்றாள் முகம் மலர.





கந்தசாமி வந்த வேலையை முடித்துவிட்டு மனம் குளிர, வீடு திரும்பினான்... "செல்வி! இன்று முதலாளியம்மா எனது விளைச்சலின் ருசியை மிகவும் புகழ்ந்தார்கள். அது சரி நம்ம பிள்ளைகள் என்ன செய்கிறார்கள். பிள்ளைகள் சாப்பிட்டார்களா?"

"ஆமய்யா சாப்பிடுகிறார்கள். கடையில் நூடுல்ஸ் பாக்கெட் வாங்கி வந்து கிண்டிக் கொடுக்கச் சொன்னார்கள். கிண்டிக் கொடுத்தேன்... அதைத் தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றாள்.

கந்தசாமி ஒன்றும் பேசத் தோன்றாமல் விழித்தார்.

– தி. வள்ளி

## செயல்பாடுகள்

- கந்தசாமியிடம் இலட்சுமியம்மாள் கூறியதைச் சொல்லுங்கள்/எழுதுங்கள்.
- சத்தான உணவு வகைகளை எழுதுங்கள்.
- கந்தசாமி தனது குழந்தைகளுக்கு என்னென்ன அறிவுரைகளைக் கூறியிருப்பார்? சொல்லுங்கள்/எழுதுங்கள்.
- சத்தான உணவு வகைகளை உண்பதால் ஏற்படும் நன்மைகளை எழுதுங்கள்.

## உடம்பைப் போற்றுக

தமிழ்ச்செல்வன்,
பைம்பொழில்.
627 806.

20.06.2024

அன்புமகன் அருள் செல்வனுக்கு.

நல்வாழ்த்துகள்! இங்கு நானும் உன் அம்மாவும் நலம். அங்கு உன்னுடைய நலத்தையும் உன் நண்பர்கள் நலத்தையும் அறிய விழைகிறேன். உன் ஆசிரியப் பெருமக்களுக்கு என் வணக்கத்தைக் கூறுக. நீ தங்கியிருக்கும் விடுதி பற்றி உன் மடலில் குறிப்பிட்டிருந்தாய். அங்கு, உனக்குச் சுவையான உணவு வழங்கப் படவில்லை என்றும் எழுதியிருந்தாய். உணவு உண்பது நாவின் சுவைக்கு அன்று; நல்ல உடல் வளர்ச்சிக்கே. அதுபற்றி உனக்குச் சில கருத்துகளைத் தெரிவிப்பதே இம்மடலின் நோக்கமாகும்.

செல்வா! நீ ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் உணவு உண்பது எதற்காக? நம் உடலை வளர்ப்பதற்காக. நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துப் பொருள் நம் உடலை வளர்க்கின்றது. எனவே, சத்துள்ள உணவை உண்டு உடலை வளர்க்க வேண்டும்.

நீ தங்கியிருப்பது மாணவர் விடுதி. நூற்றுக்கணக்கில் மாணவர் இருப்பர். அங்கே அனைவருக்கும் அவரவர் விருப்பத்திற்கேற்ப உணவைச் செய்து கொடுக்க முடியுமா? முடியாதல்லவா?

நல்ல ஊட்டச்சத்து நிறைந்து உடல் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் உணவையே 'சரிவிகித உணவு' என்பர். அத்தகைய உணவு உடல் வளர்ச்சிக்கும். உறுப்புகளின் முறையான இயக்கத்துக்கும் துணை செய்யும். அது நோய் நொடியிலிருந்து உடம்பைக் காக்கும். தேவையான ஊட்டச்சத்துகள் சரியான அளவிலும் சரியான விகிதத்திலும் கலந்து இருப்பதால் அதனைச் சரிவிகித உணவு என்று கூறுகின்றனர். உடம்பைப் போற்றுக! சத்து மிக்க சரிவிகித உணவை உண்டு மகிழ்க! பிற பின்னர்.

அன்புத் தந்தை, தமிழ்ச் செல்வன்

உறை மேல் முகவரி:

பெறுநர்


த.அருள்செல்வன்,
அரசினர் மாணவர் விடுதி,
திருவனந்தபுரம்.

### செயல்பாடுகள்

- கடிதத்தை வாசித்து அதில் இடம்பெற வேண்டிய அமைப்புகளைக் கூறுங்கள்.



# நலம்! நலமே விளைக!!



## பசியும் ருசியும்

வளவன் ஆறாவது வகுப்பு படிக்கும் மாணவன். அவன் நன்றாகப் படிப்பான். ஆனால் அவனிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அடிக்கடி எதாவது சாப்பிட்டுக்கொண்டே இருப்பான். வீட்டில் மட்டுமல்ல வெளியிலும் அப்படித்தான். உண்டு எழுந்து சிறிது நேரம்தான் ஆகியிருக்கும். அதற்குள் மீண்டும் எதையாவது எடுத்துச் சாப்பிடத் தொடங்கிவிடுவான். இதனால் சிலர் அவனைச் 'சாப்பாட்டு ராமன்' என்று கிண்டல் செய்வதுண்டு. ஆனால் வளவன் அதற்காக வருத்தப்படுவது இல்லை. சாப்பாடுதான் அவனுக்கு முக்கியம்.

அன்று ஒரு பண்டிகைநாள். வீட்டில் பலவிதமான பலகாரங்கள் செய்தனர். மாறி மாறி அந்தப் பலகாரங்களை நிறையவே தின்றான் வளவன். தின்று தின்று வயிறு ஊதிப் புடைத்தது. ஆனாலும் அவனது நாக்கின் கொதி அடங்கவில்லை. தின்றது போதும் என்று பெற்றோர்கள் தடுத்தார்கள். அவனோ அவர்கள் சொன்னதைக் கேட்கவில்லை. பெற்றோர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக மீண்டும் சில பலகாரங்களை எடுத்துச் சாப்பிட்டான். ஒரு பத்து நிமிடம் கழிந்திருக்கும். வளவனுக்கு வியர்த்தது. வயிறு வலித்தது. வளவன் வாந்தி எடுக்கத் தொடங்கினான். அவன் வாந்தி எடுக்கும் சத்தத்தைக் கேட்டுப் பெற்றோர் ஓடிவந்தனர். அவர்கள் பயந்துவிட்டனர். உடனடியாக அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

மருத்துவமனையில் மருத்துவர் நடந்தவற்றை எல்லாம் கேட்டறிந்தார். பலவாறு பரிசோதித்தார். 'பயப்பட ஒன்றுமில்லை' என்று அவர் சொன்னபோதுதான் பெற்றோர் அமைதி அடைந்தனர். அளவுக்கு அதிகமாக உணவுப் பண்டங்கள் தின்றதால் சீரணம் ஆகவில்லை. அதுதான் இதற்கெல்லாம் காரணம் என்று மருத்துவர் கூறினார். சில மருந்து மாத்திரைகளுக்கான சீட்டு எழுதிக் கொடுத்தார். பெற்றோர்களைத் தனியாக அழைத்து. "இனிமேல் சிறிது நாட்கள் அவனது கண்ணில் படுமாறு உணவுப் பண்டங்களை வைக்காதீர்கள் என்று உபதேசித்தார். பின்னர் வளவனை அருகில் அழைத்து. "தம்பி! ஒரு முறை சாப்பிட்டபின் பசியெடுத்தால்தான் அடுத்தமுறை சாப்பிடவேண்டும்.... இல்லையென்றால் மருந்து மாத்திரை எல்லாம் சாப்பிடணும்... ஊசியும் போடவேண்டி வரும்" என அமைதியாக எச்சரித்தார் மருத்துவர். வளவனும் சரி எனத் தலையாட்டினான். அவர்கள் வீடு திரும்பினர்.

எப்படியோ கண்களை மூடிக்கொண்டு கசப்பான மருந்துகளை ஐந்து நாட்கள் சாப்பிட்டான் வளவன். "ஒருநாள் இனிப்பிற்கு ஐந்து நாட்கள் கசப்பு!" அவன் நினைத்துக்கொண்டான். சில நாட்களுக்குப் பின் வயிறு சரியானது. அவன் வகுப்பிற்குச் சென்றான். அன்றைய பாடம் திருக்குறள்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்ற திருக்குறளைச் சொல்லி "நாம் அடிக்கடி உண்ணக் கூடாது. ஒருமுறை உண்டது சீரணம் ஆனபின்னரே அடுத்து உண்ணவேண்டும். இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் உடலுக்கு மருந்தே தேவையில்லை" என்று அந்தக் குறளின் விளக்கத்தையும் கூறினார் தமிழாசிரியர். இன்றைய மருத்துவர்கள் கூறும் இந்தக் கருத்தை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம் திருவள்ளுவரும் கூறியிருக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டான் வளவன்.

இப்போதெல்லாம் அவன் அடிக்கடி உணவுப் பண்டங்களைத் தின்பதில்லை.

– நா. ஞானசெல்வன், திருக்குறள் கதைகள்

## செயல்பாடுகள்

- திருக்குறள் பாடலை வாசியுங்கள். அதன் கருத்தைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்து எழுதுங்கள்.

- பசித்த பின்பு உண்ண வேண்டும். சரியா? தவறா? கலந்துரையாடி கருத்துகளைக் கூறுங்கள்.
- அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - கிண்டல் –
    - ரகசியம் –
    - சீரணம் –
    - உபதேசம் –
    - புடைத்தது –
    - வருத்தம் –


## கழுவி! கழுவி!!

காய்கறிக்கடையில், அம்மா காய் வாங்கிக்கொண்டிருந்தார். யாமினி ஒரு வெண்டைக்காயைக் கையில் எடுத்தாள். "நன்றாகத் துடைத்துச் சாப்பிடு" என்றார் அம்மா. வெண்டைக்காயைத் துடைக்கத் தொடங்கியவள், அருகில் பேசும் குரல் கேட்டு உற்றுக் கவனித்தாள்.

அம்மா பசிக்கிறது என்று ஒரு ஈ தன் அம்மாவிடம் கூறியது. என்னுடன் வா உனக்கு உணவைத் தேடக் கற்றுத் தருகிறேன் என்று தாய் ஈ கூறியது. யாமினி வியப்புடன் ஈக்களைத் தொடர்ந்தாள். ஈக்கள் அருகில் உள்ள பழக்கடையில் நுழைந்தன.







இதுதான் பழக்கடை. முன்பெல்லாம் இங்கே வந்துதான் விருப்பம் போல பழம் தின்போம். ஆனால் இப்போது அது முடியவில்லை என்று தாய் ஈ சோகமாகச் சொன்னது.

ஏன் அம்மா யாராவது நம்மை அடிப்பார்களா? என்றது குட்டி ஈ. இல்லை இப்பொழுது விற்கும் பழம், காய்கறிகளை நாம் அப்படியே சாப்பிட முடியாது என்றது தாய் ஈ. ஐ! மாம்பழம்! பார்க்க அழகாக இருக்கிறதே! இதைச் சாப்பிடலாமா? என்றது குட்டி ஈ. வேண்டாம் இந்த மாம்பழங்கள் கார்பைடு கற்கள் போட்டுப் பழுக்க வைத்தவை. இதை அப்படியே உண்டால் வயிறு கெட்டுப் போகும். தண்ணீரில் உப்புப் போட்டு ஊற வைத்துப் பலமுறை கழுவிதான் உண்ண வேண்டும், என்றது தாய் ஈ.

குட்டி ஈ, திராட்சைக் குலையைக் காட்டி, அம்மா அந்தப் பழத்தையாவது உண்ணலாமா? என்று ஏக்கமாகக் கேட்டது. திராட்சையா? இது மாம்பழத்தை விடக் கெடுதலானதே. திராட்சைக் கொடியில் காயாக இருக்கும்பொழுதே மருந்தில் மூழ்க வைக்கிறார்கள். அப்போது தான் விரைவில் பழுக்குமாம். ஒரு மணி நேரமாவது காம்பை எடுக்காமல் ஊற வைத்துக் கழுவித்தான் உண்ணவேண்டும். நமக்கு யார் கழுவித் தருவார்கள்? என்றது ஈ.

குட்டி ஈ ஆப்பிள் பழத்தைக் காட்டி "அப்படி என்றால் இந்தப் பழத்தை உண்ணலாமா? என்று கேட்டது. "அதை ஏன் கேட்கிறாய்? ஆப்பிள் பளபளன்னு இருப்பதற்காக மெழுகு தோய்த்து வைக்கிறார்கள். அந்த ஆப்பிளைத் தோலுடன் உண்ணக்

கூடாது. இவை மட்டும் இல்லை. இங்கு பெரும்பான்மையான பழங்கள் மருந்து தெளிக்கப்பட்டவையே" என்றது தாய் ஈ.

"நாம் எதைத்தான் உண்பது?" எனச் சோர்வாகக் கேட்டது குட்டி ஈ. "வா இந்த வீட்டுத் தோட்டத்தில் மருந்து போடாமல் விளைந்துள்ள சப்போட்டா, பப்பாளி, கொய்யாப் பழங்களை நாம் உண்ணலாம்" என்றது தாய் ஈ. " நல்லவேளை எனக்கு இதை எல்லாம் நீங்கள் சொல்லிக் கொடுத்தீர்கள். மனிதர்கள் உண்ணும் காய்கறிகள், கீரைகள், பழங்களை எல்லாம் நன்றாகக் கழுவி உண்ணுகிறார்களோ இல்லையோ" என்றது குட்டி ஈ. கவலையுடன் ஈக்கள் பறந்தன.

அதிர்ந்து போன யாமினி, முதலில் இதை நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சொல்லப் போகிறேன். நானும் இதைக் கழுவி உண்பேன் என்று எண்ணியவாறு அம்மாவுடன் வீட்டுக்குச் சென்றாள். வெண்டைக்காயை நன்கு கழுவித்தின்றாள்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கதையைக் கூறுங்கள்.
- பழங்களைக் குறித்துத் தாய் ஈயும், குட்டி ஈயும் உரையாடியவற்றைக் குறிப்பிடுங்கள்.
- வீட்டுத் தோட்டத்தில் விளையும் பழங்களை எழுதுங்கள்.
  - .................................... • ....................................
  - .................................... • ....................................
- ஈக்கள் பேசியதைக் கேட்ட யாமினி எடுத்த முடிவைக் குறிப்பிடுங்கள்.
- நீங்கள் பழங்களையும், காய்கறிகளையும் எவ்வாறு சாப்பிடுவீர்கள்? கலந்துரையாடி எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் வினா வாக்கியங்களைக் கண்டு பிடித்து எழுதுங்கள்.
  - .................................... • ....................................
  - .................................... • ....................................



# நூறு வயது வாழ...!



## ஊசியில்லா மருந்து

உடற்பயிற்சி செய்வதால்
உடலில் உறுதி வந்திடும்
உடலும் உறுதி ஆவதால்
ஓங்கித் திறமை வளர்ந்திடும் !

நோயில்லாமல் நாமெல்லாம்
நூறு வயது வாழலாம்
ஆய கலைகள் அனைத்தையும்
அறிந்து இன்பம் அடையலாம் !

ஊசியில்லா மருந்து தான்
உண்மை இன்ப விருந்துதான்
ஓசை இன்றி உதவிடும்
உடற்பயிற்சி நண்பன்தான்!

உலகம் முழுதும் செய்கிறார்
உடலில் அழகைப் பெறுகிறார்
திலகம் போல வாழவே
தினமும் பயிற்சி செய்குவோம்!



எஸ். நவராஜ் செல்லையா

## செயல்பாடுகள்

- பாடலை இராக தாளத்துடன் பாடுங்கள்.
- உடற்பயிற்சி செய்வதனால் ஏற்படும் நன்மைகளைக் குழுவில் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- இரு அணிகளாகப் பிரிந்து பாடலைப் பாடுங்கள்.

| அணி–1 | அணி–2 |
| --- | --- |
| • உடற்பயிற்சி செய்வதால் | உடலில் உறுதி வந்திடும் |
| • உடலும் உறுதி ஆவதால் | ஓங்கித் திறமை வளர்ந்திடும் |
| • ...................................... | ........................................... |
| • ...................................... | ........................................... |
| • ...................................... | ........................................... |
| • ...................................... | ........................................... |
| • ...................................... | ........................................... |

- தொடர் அமையுங்கள்

எ.கா : உறுதி – கட்டிடம் உறுதியாக இருந்தது

- இன்பம் ........................................................................
- மருந்து ........................................................................
- அழகு ........................................................................
- ஓசை ........................................................................
- ஊசி ........................................................................

# ஆளும் வளரணும் அறிவும் வளரணும்!


கடைசி இரு பந்துகளில் ஜடேஜா விளாசிய 10 ரன்களால்

5-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது சிஎஸ்கே


**இறகுப்பந்து; மாணவர்கள் அசத்தல்**

கோவை, செப். 27–

அண்ணா பல்கலை 11வது மண்டலத்துக்கு உட்பட்ட கல்லூரி மாணவ – மாணவியருக்கான இறகுப்பந்து போட்டி, சரவணம்பட்டி எஸ்.என்.எஸ்., தொழில்நுட்ப கல்லூரி சார்பில் நடந்தது.

போட்டியை, கல்லூரி முதல்வர் செந்தூரபாண்டியன் துவக்கி வைத்தார். மாணவர் பிரிவில் 13 கல்லூரிகளும், மாணவியர் பிரிவில் 9 கல்லூரிகளும் போட்டியிட்டன.

அண்ணா பல்கலைக்கு உட்பட்ட இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கான பேட்மிட்டன் போட்டி கோவை சரவணம்பட்டி எஸ்.என்.எஸ்., கல்லூரியில் நடந்தது. இதில் விளையாடிய மாணவியர்.

**மாணவர் பிரிவு**

முதல் சுற்றுப்போட்டியில், கே.ஜி.ஐ.எஸ்.எல்., அணி 2 – 0 என்ற செட் கணக்கில் ரங்கநாதன் இன்ஜி., கல்லூரி அணியையும், யுனைடெட் கல்லூரி அணி 2 – 0 என்ற செட் கணக்கில் ஆதித்யா தொழில்நுட்ப கல்லூரியையும், சி.எஸ்.ஐ., கல்லூரி அணி 2 – 0 என்ற செட் கணக்கில், ஸ்ரீ சக்தி இன்ஜி., கல்லூரி அணியையும் வீழ்த்தின.

**மாணவியர் பிரிவு**

முதல் சுற்றுப்போட்டியில், அண்ணா பல்கலை அணி, 2 – 0 என்ற செட் கணக்கில் ராமகிருஷ்ணா இன்ஜி., கல்லூரியையும், எஸ்.என்.எஸ்., இன்ஜி., கல்லூரி அணி 2 – 0 என்ற செட் கணக்கில் கே.ஜி., கல்லூரி அணியையும், கே.சி.டி., 2 – 0 என்ற செட் கணக்கில் ஜி.சி.டி., யையும், எஸ்.என்.எஸ்., டெக் கல்லூரி அணி, 2 – 0 என்ற செட் கணக்கில் இன்போ கல்லூரியையும் வீழ்த்தின.

கொச்சி, செப்:7

பிரபல ஒட்டப் பந்தய வீரர் மணிவண்ணன், சர்வதேச விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு நேற்று நாடு திரும்பினார். விமான நிலையத்தில் செய்தியாளர்களுடன் உரையாடினார். அப்போது அவர் பேசியது....

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று சொல்வார்கள். அது உண்மை. எல்லாப் பெற்றோர்களுமே தங்கள் குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டும், உயர்ந்த இடங்களில் வேலை பார்க்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். அதில் தவறு இல்லை. அதற்காகக் குழந்தைகளை எந்த நேரமும் படி... படி என்று கட்டாயப்படுத்துவது சரியல்ல. விளையாடவும் நண்பர்களுடன் பழகவும் சற்று ஓய்வு எடுக்கவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். சிறிது நேரம் பாட்டுக் கேட்பதிலும் படம் பார்ப்பதிலும் தவறில்லை. காலை எழுந்த உடன் படிப்பு, பின்பு கனிவு தரும் நல்ல பாட்டு – மாலை முழுவதும் விளையாட்டு என்று பாரதியாரும் இதைத்தானே சொல்லியிருக்கிறார்.

விளையாட்டு என்பது வெறும் பொழுது போக்கல்ல. அது நல்லதோர் உடற்பயிற்சியும் ஆகும். உடல் நலத்துடன் ஆரோக்கியமாக வாழ உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாத ஒன்று. ஆளும் வளரணும்.... அறிவும் வளரணும். அதுதான் உண்மையான வளர்ச்சி. ஆள் வளர உடற்பயிற்சி தேவை. அறிவு வளர கல்வி தேவை. எனவே கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்வோம். இவ்வாறு மணிவண்ணன் எடுத்துரைத்தார்.

## செயல்பாடுகள்

கீழே கொடுத்திருக்கும் கூற்றுகளை வாசித்து சரியா (✓) தவறா(×) என அடையாளப்படுத்துங்கள்.

- துரித உணவு சாப்பிடுவது உடலுக்கு நல்லது ☐
- அடிக்கடி உணவு உண்பது நல்லது ☐
- உடலினை உறுதி செய்ய உடற்பயிற்சித் தேவை ☐
- எப்பொழுதும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும் ☐
- சத்தான உணவுகளை உண்பது நல்லது ☐
- அதிகாலையில் நடைப் பயிற்சி மேற்கொள்வது நன்று ☐
- பழங்களையும், காய்கறிகளையும் கழுவாமல் உண்ண வேண்டும் ☐
- சிறுதானியங்களில் கோதுமையும் ஒன்றாகும் ☐
- நாம் நீண்டநாள் ஆரோக்கியமாக வாழ உடற்பயிற்சியும் உணவும் தேவை ☐
- பசித்த பின் உண்பதே சிறந்தது ☐



# அலகு 3

# ஆடுவோம்! பாடுவோம்!!



நம் நாட்டில் பொங்கல், ஓணம், தீபாவளி, இரம்சான், கிறிஸ்துமஸ் என பலதரப்பட்ட பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. இப் பண்டிகைகளை மக்கள் பாகுபாடு இல்லாமல் கொண்டாடி மகிழ்கின்றனர்.

# பொங்கலோ பொங்கல்



## கதிரவனின் பொங்கல்

பொங்கலோ பொங்கல்
புத்தரிசிப் பொங்கல்
பொங்கி எரியும் பொங்கல்
புன்மை போகிப் பொங்கல்!

கரும்பு தின்னும் பொங்கல்
கதிரவனின் பொங்கல்
விரும்பி உண்ணும் பொங்கல்
விழாப் பெரும் பொங்கல் !

தொழுது போற்றும் பொங்கல்
தூய இனிமைப் பொங்கல்
உழுத உதவி நினைக்கும்
உயர்ந்த மாட்டுப் பொங்கல் !

சுற்றம் அன்பு நாடி
சூழ்ந்து மகிழும் பொங்கல்
நற்றமிழர் பொங்கல்
நன்றி காணும் பொங்கல்



முனைவர்.அ. கிருட்டிணமூர்த்தி

## செயல்பாடுகள்

- பாடலுக்கு மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலை வாசித்துப் பொங்கலைப் பற்றிக் கூறுங்கள்.
- பாடலை வாசித்துப் பொங்கலின் வகைகளை வரிசைப்படுத்துங்கள்.
    - 
    - 
    - 

## வாணியும் கீதாவும்

வாணியும் கீதாவும் நல்ல நண்பர்கள். ஆனால் கீதாவின் அம்மாவும் வாணியின் அம்மாவும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் வாழும் வட்டாரத்தில் பொங்கல் கொண்டாட்டம் நடைபெற இருந்தது.







போட்டித் தொடங்கியது
வாணி! பொருள்கள் இருக்கும் பையை எடு!
அம்மா! எல்லா இடத்திலும் தேடிவிட்டேன். பையைக் காணவில்லை.
3
வாணியும் அவளது அம்மாவும் பொங்கல் சமைப்பதற்குரிய பொருள்கள் இல்லாமல் தவிப்பதைக் கீதா அறிந்தாள்.
அம்மா! பாவம் வாணி! நம்மிடம் இருக்கும் பொருள்களில் பாதியை அவர்களுக்குக் கொடுத்து உதவலாமா?
MILK
சரி, அவர்கள் வாங்கிக் கொள்வார்களா?
4
கவலை வேண்டாம் ! இதோ! பொங்கலுக்குத் தேவையான பொருள்கள்.
நன்றி
இந்தப் பாலையும் வாங்கிக்கொள் வாணி
5
பொங்கல் பானைகளிலிருந்து பால் பொங்கியது
பொங்கலோ பொங்கல்!
6
வாணியின் அம்மா முதலில் வெல்லத்தைச் சேர்க்கப்போனார். அப்போது
பொறுங்கள்! இப்போது சேர்க்கக்கூடாது . முதலில் அரிசியைப் போடுங்கள்
ஆமாம் அவசரத்தில் மறந்து விட்டேன்
7
கீதாவும் வாணியும் காணாமல் போன பையுடன் வந்தார்கள்.
அம்மா...... நானும் கீதாவும்தான் ஒளித்து வைத்தோம்.
வாணி, இந்தப் பை உனக்கு எப்படிக் கிடைத்தது?
நீங்கள் இருவரும் மீண்டும் பேச வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்தோம். எங்களை மன்னித்துவிடுங்கள்.
8

அவர்கள் தங்கள் பிள்ளைகளின் எண்ணத்தைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் எல்லாரும் ஒன்றாகப் பொங்கலைச் சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்.

– சிறுவர் கதைநூல்–1

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து மையக்கருத்தைக் கூறுங்கள்.
- கதையில் வரும் கதாபாத்திரங்களை எழுதுங்கள்.
    - ....................................
    - ....................................
    - ....................................
    - ....................................
- கதையை வாசித்து நடித்துக் காட்டுங்கள்.
- பொங்கல் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் என்னென்ன என்பதை எழுதுங்கள்.
    - ....................................
    - ....................................
    - ....................................
    - ....................................
    - ....................................
    - ....................................
- பொங்கல் தயார் செய்யும் முறையை வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டு எழுதி வாருங்கள்.

## தமிழர் திருநாள்

'தமிழர் பண்டிகைகளில்' மிக முக்கியமான ஒன்று பொங்கல் விழா ஆகும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற பெருமைக்குரிய உழவர்களின் சிறப்பினை உலகிற்கு உணர்த்துவதாகத் தோன்றிய விழா பொங்கல் என்றாலும், உண்மையில் அனைவரும் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவினைப் பெறுவதற்கு மூலகாரணமான சூரியன், மாடுகள் என்று பலவற்றைச் சிறப்பிக்கவே இவ்விழா தோன்றியது.

பொங்கல் திருநாள் நான்கு நாட்களுக்கான திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. முறையே போகிப் பொங்கல், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என்பதாக

அவ்விழா அமைகின்றது. இவ்விழாவின் வருகையினை ஒட்டி வீட்டைத் தூய்மைப்படுத்தி, புதிய வண்ணங்கள் பூசி, மாக்கோலமிட்டு அழகுபடுத்துவார்கள்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதனை ஒட்டி தைமாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. அதிகாலையில் எழுந்து குளித்து 'புத்தாடை அணிந்து' வாசலில் வண்ணக் கோலமிட்டு, வீட்டின் முற்றத்தில் புதிய அடுப்பு, புதிய பானை வைப்பார். அப்பானையில் மஞ்சள் பூசி, பொட்டுவைப்பர். மஞ்சள், கிழங்குகள், கரும்பு, வெற்றிலை, பாக்கு, பழம், அனைத்தும் படைத்து விளக்கேற்றி சூரியனை



வழிபடுவார்கள். அதன் பின்பு பானையில் அரிசி, வெல்லம், பால், தண்ணீர்விட்டுப் பொங்கலிடுவர். சூரிய உதயத்திற்குள் பொங்கலிடுவார்கள். பொங்கல் பொங்கிவழியும் தருணத்தில் அனைவரும் சேர்ந்து 'பொங்கலோ பொங்கல்' என்று கூறி மகிழ்வார்கள். மேலும் குரவை ஒலிகளும் ஆரவாரங்களும் செய்து மகிழ்வர். பொங்கல் தயாரானவுடன் தங்களின் நல்ல விளைச்சலுக்குக் காரணமான சூரியனுக்கு நன்றிகூறுவார்.

– முனைவர். கே. இரா. கமலா முருகன்

## செயல்பாடுகள்

- நீங்கள் கொண்டாடி மகிழும் விழாக்களின் பெயர்களைக் கூறுங்கள்.
- பொங்கல் கொண்டாடுவதின் நோக்கங்களை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நீங்கள் வீடுகளில் செய்யும் செயல்களைப் பாடப்பகுதியில் இருந்து எடுத்து எழுதுங்கள்.

  - ..................................... • .....................................
  - ..................................... • .....................................
  - ..................................... • .....................................

- உழவர்களின் சிறப்பினைக் கூறும் திருக்குறளைக் குறிப்பிடுங்கள்.

  - ........................................................................................

    ........................................................................................

- தமிழர் திருநாளுக்கு உங்கள் நண்பனை வாழ்த்த வாழ்த்து அட்டை தயார் செய்யுங்கள்.
- கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்குச் சரியான தொடர் அமையுங்கள்.

  - வண்ணங்கள் : ........................................................
  - கதிரவன் : ........................................................
  - புத்தாடை : ........................................................
  - முற்றம் : ........................................................
  - பண்டிகை : ........................................................



# ஆவணியும் பூவணியும்



## ஓணம் ஓணம் திருவோணம்

ஓணம் ஓணம் திருவோணம்
உள்ளம் மகிழும் திருவோணம்
காணும் எல்லா இடங்களுமே
கலையாய் விளங்கும் திருவோணம்

ஆவணி மாதம் அத்தம் முதல்
அழகிய பத்தாம் நாள்வரையில்
பூவணி கோலம் முற்றமெலாம்
புன்னகை புரியும் திருவோணம்!

புத்தம் புதிய உடையணிந்து
பூவைப் போல மலர்ந்துமுகம்
சித்தம் குளிர உணவுண்டு
செழிப்பாய் வாழும் திருவோணம்!



வள்ளங் களியில் பங்கெடுத்து
வகையாய் ஊஞ்சல் ஆடியாடி
துள்ளித் துள்ளிப் பந்தடித்துத்
தும்பி ஆடும் திருவோணம்!

ஓட்டந் துள்ளல் கதகளியும்
ஒப்பனை திருவா திரையுடனே
ஓணம் ஓணம் திருவோணம்
உள்ளம் மகிழும் திருவோணம்

– குற்றாலதாசன் கே.என்.பெருமாள்

## செயல்பாடுகள்

- கவிதையை இராக, தாளத்துடன் பாடுங்கள்.
- பாடலை வாசித்து உங்களுக்குப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்.
- திருவோணத்தைப் பற்றிக் கலந்துரையாடி கருத்துகளைக் கூறுங்கள்.
- எழுத்துகளை ஒழுங்குபடுத்திச் சொற்கள் அமையுங்கள்.

  எ.கா: ல் ங் பொ க – பொங்கல்

  - ண ஓ ம் – ..........................................
  - ஞ் ச ல் ஊ – ..........................................
  - வோ ரு தி ம் ண – ..........................................
  - ம் அ த த் – ..........................................

- வண்ண நிறத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் 'ஐ' சேர்த்து வாக்கியங்களை எழுதுங்கள்.

  எங்களது பள்ளியில் ............................. (ஓணவிழா) கொண்டாட ...................... (பூக்கள்) பறிக்கச் சென்றேன். நண்பர்களுடன் சேர்ந்து ............................. (பூக்கோலம்) வரைந்தேன். ஆசிரியர் .............................(கோலம்) பார்த்துப் பாராட்டினார். நாங்கள் ஓண.............................(விளையாட்டு) விளையாடினோம். அனைவருக்கும் ஓண ..................... (விருந்து) பரிமாறினோம். ஓணவிழா கொண்டாடிய ............................. (மகிழ்ச்சி) பகிர்ந்து கொண்டு பிரிந்தோம்.

## பூக்களின் திருவிழா

ஓணம் என்பது ஒரு வசந்த காலப் பண்டிகை, பூக்களின் திருவிழாக்காலம். பல வண்ணங்களுடைய மலர்களைச் சேகரித்து முன் வாசல்களில் கோலமிடுவது இதன் சிறப்பம்சமாகும். பிற எல்லா பண்டிகைகளுக்கும் உள்ளது போலவே, ஓணம்

தொடர்புடைய கதையும் ஒன்று உண்டு. ஒரு காலத்தில் கேரளத்தை மகாபலி என்ற அரசன் ஆண்டுவந்தான். அறிவில் சிறந்த அவனது நல்லாட்சியினால் அவனை மக்கள் அனைவரும் விரும்பினர். அவனைத் தேவர்கள் வெறுக்கத் துவங்கினர். அவன் மீது திருப்தியின்மையும், பொறாமையும் கொண்டனர். எனவே வாமனன் என்ற பெயரில் குறுகிய வடிவில் ஒருவர் மகாபலியிடம் வந்தார். மூன்றடி மண் தானமாகக் கேட்டார். யார் தானம் கேட்டாலும் மறுக்காத அரசன் சற்றும் தயங்காமல் அக்கணமே அதற்குச் சம்மதித்தான். உடனே வாமனன் தன்



உருவத்தைப் பெருக்கிக் கொண்டு உலகளவு வளர்ந்து நின்றார். முதல் காலடியில் பூமியை அளந்தார். இரண்டாவது அடியில் வானுலகை அளந்தார். மூன்றாவது அடியை எங்கே வைப்பது?

அரசன் மகாபலி தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறாதவன். உடனே தன் தலையைத் தாழ்த்தி மூன்றாவது அடியைத் தலையில் வைக்குமாறு கூறினான். வாமனனும் உடனே அவ்வாறே செய்து, மகாபலியைப் பாதாள உலகம் வரை அழுத்தினார்.

வாமன வடிவில் வந்த மாகவிஷ்ணு மறைந்து போவதற்கு முன் மகாபலி அவரிடம் ஒரு வரம் கேட்டார். ஆண்டிற்கு ஒரு முறை தன் மக்களைப் பார்க்க தான் பூலோகம் வருவதற்கு அனுமதி வேண்டினார். அவர் கேட்ட வரத்தை மகாவிஷ்ணு தந்தருளினார்.

மகாபலியின் தியாகத்தைக் கொண்டாடிப் போற்றும் பண்டிகைதான் ஓணம் எனலாம். மகாபலியின் ஆட்சிக்காலத்தில் தாங்கள் மகிழ்ந்திருந்ததற்கு நன்றி சொல்லவே கேரள மக்கள் ஆண்டிற்கொருமுறை அவரை வரவேற்று, பண்டிகை கொண்டாடி மகிழ்கின்றனர்.

– சுற்றுலாத்துறை (கேரள அரசு)

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து ஓணம் பற்றிய கருத்துகளைக் கூறுங்கள்.
- ஓணம் தொடர்பான கதையைச் சொல்லுங்கள்.
- மகாபலி அரசன் ஆண்டுதோறும் மக்களைக் காண வரும் காரணத்தை எழுதுங்கள்.
- பாடப்பகுதியை வாசித்து நிரப்புங்கள்.
  - ஓணம் என்பது ஒரு ............................... பண்டிகை
  - .................... மன்னன் மக்களைக் காண வருடந்தோறும் வருவார் என்று நம்பப்படுகிறது.
  - திருவோணம் என்பது பூக்களின் ...............................
  - கேரளத்தின் தேசிய விழா...............................
- கொடுத்திருக்கும் சொற்களில் முதல் எழுத்தை மாற்றி புதிய சொற்களைக் கண்டறியுங்கள்.
  - கொண்டாட்டம்
  - வண்ணம்
  - திருவிழா
  - ஒருமுறை
  - பூக்கோலம்
  - தொல்லை
  - மாதம்
  - ஆண்டு வந்தான்
  - வேலை
  - தும்பை

  (கொ , அ, மா, இ, பெ, தி, எ, பா, இ)
- என்னைச் சேர்த்தால் பொருள் தருவேன்.
  - நல்ல + ஆட்சி = ..........................................
  - அறிவில் + சிறந்த = ..........................................
  - விழா + காலம் = ..........................................
  - தொல்லை + இல்லை = ..........................................
  - வான் + உலகு = ..........................................

## தும்பி வா வாவோ

தும்பி துள்ளல் ஓணக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகும், சில நேரங்களில் திருவாதிரையின் போது நடத்தப்படும் ஒரு வேடிக்கையான விளையாட்டாகவும் திகழ்கிறது. இது பெண்களால் நிகழ்த்தப்படுகிறது. நடுவில் இருக்கும் பெண் தன் கைகளில் அல்லது ஒரு பானையில் சிறிய 'தும்பை' இலைகளை வைத்திருப்பாள். அவள் தும்பி என அறியப்படுகிறாள். தும்பியைச் சுற்றிலும் பாடகர்கள் மற்றும் நடனக்கலைஞர்கள் இருந்து ஆரவாரம் செய்வார்கள். அவர்கள் பாடல்களின் தாளத்திற்கு ஏற்ப தும்பியை மெதுவாக ஆடச் செய்கிறார்கள். பாடலின் வேகம் அதிகரிக்க, பெண் தும்பி ஆடத் தொடங்குகிறாள்.



பாடல் உச்சத்தை எட்டியதும், பூக்களைக் கொண்ட பெண் நடுங்கத் தொடங்குகிறாள். வளிமண்டலம் இசையால் நிரம்பி வழிகிறது.

தும்பி துள்ளலில் மிகவும் பிரபலமான பாடல்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில் கிராமங்களில் பிரபலமான தும்பி துள்ளல், இப்போது ஓணக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நிகழ்த்தப்படுகிறது.

– சுற்றுலாத் துறை (கேரள அரசு)

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- தும்பி துள்ளல் விளையாட்டின் சிறப்பம்சங்களை எழுதுங்கள்.
- தும்பி துள்ளல் விளையாட்டை நடித்துக் காண்பியுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்துக் கேள்விகளுக்கு (வினாக்களுக்கு) விடையளியுங்கள்.

ஒரு காலத்தில் தும்பி துள்ளல் விளையாட்டு கேரளத்தில் காணப்பட்டது. இது திருவாதிரையின் போது நடத்தப்படும் ஒரு விளையாட்டாகும். இவ்விளையாட்டில் பானையில் சிறிய தும்பை இலைகளை வைத்திருப்பார்கள். பாடகர்கள் மற்றும் நடனக் கலைஞர்கள் சுற்றிலும் இருந்து ஆரவாரம் செய்வார்கள். அப்போது தும்பி, பாடலின் தாளத்திற்கேற்ப ஆடத் துவங்குவாள்.

- தும்பி துள்ளல் விளையாட்டு எங்கு பிரபலமாகக் காணப்பட்டது?

  ............................................................................

- தும்பி துள்ளல் விளையாட்டு எந்த நடனம் நடத்தப்படும்போது விளையாடப்படும்?

  ............................................................................

- தும்பி துள்ளல் விளையாட்டின் போது பானையில் வைக்கப்படும் இலையின் பெயர் என்ன?

  ............................................................................

- தும்பி ஆடத்தொடங்குவது எப்போது? ..........................
- தும்பியைச் சுற்றிலும் இருந்து ஆரவாரம் செய்பவர்கள் யார்? யார்? எழுதுங்கள்.



# சிரிக்கும் மத்தாப்பு



## தீபாவளி வந்தாச்சு

தீபாவளி வந்தாச்சு
தீபாவளி வந்தாச்சு
விடியற் காலை எழுந்தாச்சு
வேகமாய் வெந்நீரில் குளிச்சாச்சு
புதிய சட்டை போட்டாச்சு
புஸ்வாணம் எல்லாம் விட்டாச்சு
வெடியெல்லாம் வெடிச்சாச்சு
வேட்டுச் சத்தம் கேட்டாச்சு
மாமாவும் கூட வந்தாச்சு
மத்தாப்பு கூட தீர்ந்தாச்சு
அதிரசமும் சுட்டாச்சு
அதிக மாகத் தின்னாச்சு
தீபாவளி யும் போயாச்சு
தெரு வெல்லாம் குப்பையாச்சு
நாமெல் லாம் சேர்ந்தாச்சு
குப்பையெல்லாம் போயாச்சு!

–மழலைத் தளிர்கள்

## செயல்பாடுகள்

- பாடலுக்கு மெட்டமையுங்கள்/பாடுங்கள்.
- பாடலுக்குப் பொருத்தமான தலைப்புக் கூறுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைப் பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.

  எ.கா: வந்தாச்சு

  - ...................................... • ......................................
  - ...................................... • ......................................
- தீபாவளியன்று நாம் செய்யும் செயல்களைப் பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.

  எ.கா: விடியற்காலை எழுந்தேன்

  - ...................................... • ......................................
  - ...................................... • ......................................
  - ...................................... • ......................................
- கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை இணைத்து 'உம்' சேர்த்து எழுதுங்கள்.

  எ.கா : நான், நண்பர்கள் பட்டாசு வெடித்தோம்.
  நானும் நண்பர்களும் பட்டாசு வெடித்தோம்.

  - தீபாவளி, பொங்கல் நமது பண்டிகைகள்
  - தீபாவளிக்கு இனிப்பு, புத்தாடைகள் கிடைத்தன
  - தங்கை, அக்கா தீபம் ஏற்றினர்
  - தம்பி, அண்ணன் எண்ணெய் தேய்த்துக் குளித்தனர்
- படம் வரைந்து நிறம் கொடுத்து மகிழுங்கள்
  (தீபாவளி தொடர்பான படம்)

### பல சொல்லுக்கு ஒரு பொருள்

| | | |
|---|---|---|
| அளம், உவர், முந்நீர், துறை | : | கடல் |
| ஓசை, சத்தம் | : | ஒலி |
| வனம், கானகம், ஆரணியம் | : | காடு |
| தென்றல், வளி | : | காற்று |
| ஆகாரம், உண்டி, ஊண் | : | உணவு |
| உடம்பு, சரீரம், மெய், மேனி | : | உடல் |
| புத்தகம், பனுவல், ஏடு | : | நூல் |
| வேலை, பணி | : | தொழில் |

## யாருக்குத் தீபாவளி?

நான் பிறக்கும்போதே ஏழைக் குடும்பத்தில் தான் பிறந்தேன். அதனால் ஓர் இலவசப் பள்ளியில் படித்து வருகிறேன். என் அப்பா இறந்து ஒரு வருடமாகிவிட்டது. என் அம்மாதான் என்னைக் காப்பாற்றி வருகிறாள். அம்மாவுக்குப் பிரபல பணக்காரரான கண்ணப்பரின் வீட்டில் சமையல் வேலை. தினசரி காலை நான்கு மணியிலிருந்து இரவு பத்து மணிவரை மாடாய் உழைப்பாள். மாதம் முடிந்ததும் நூறு ரூபாய் சம்பளம் கிடைக்கும். அந்த நூறு ரூபாயை வைத்துக்கொண்டு, நாங்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

என்ன செய்வது? நான் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்திருக்கக் கூடாதா?



ராமு பணக்கார கண்ணப்பரின் ஒரே மகன். அவன் விரும்பியதை எல்லாம் நிறைவேற்றத் தயாராக இருக்கிறார் கண்ணப்பர். பணக்கார வாழ்வைச் சொல்லவா வேண்டும்? சொர்க்க வாழ்வு தான்!

அன்று தீபாவளி. 'பட்...பட்....படார்! டப் ....டப்.... டபார்' என்று சத்தமிடும் விதவிதமான பட்டாசுக் கட்டுகளைக் கொளுத்திக் கொண்டிருந்தான் ராமு. யானைவெடி, சீன வெடி, வானவெடி என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அந்த வெடிகளெல்லாம் அவனிடம் படாத பாடுபட்டன.

நான் இதை என் வீட்டு வாசலில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்தேன். ராமு பட்டாசு வெடிப்பதை என்னால் சும்மா பார்த்துக்கொண்டே நிற்க முடிந்ததா? இல்லை. எனக்கும் பட்டாசு வெடிக்க ஆசை தோன்றியது.

என் உள்ளம் பட்டாசு வெடிக்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தது. ஓடிப்போய் ராமுவிடம் பட்டாசு கொடுக்கும்படிக் கேட்கலாமா என்று நினைத்தேன். ராமுவின் வீட்டை நோக்கி ஓடினேன். ஆனால், என் மனச்சாட்சி என்னை அங்குப் போக வேண்டாம் என்று தடுத்தது. "ராமு நிச்சயம் உனக்குத் தரமாட்டான். உன்னைத் திட்டி அனுப்பிவிடுவான். வீணாக ஏமாந்து போகாதே!" என்று எச்சரித்தது. ஆகையால் வழியிலேயே திரும்பி வந்துவிட்டேன்.

பேசாமல் வீட்டுக்கு வந்து ஆசையை அடக்கிக் கொண்டிருந்தேன்.



அன்று பிற்பகல் மணி இரண்டு இருக்கும். என் அம்மா வீட்டுக்கு வந்தாள். வந்ததும் என்னைப் பார்த்து, "முருகா, இந்தாடா உனக்குப் பட்டாசு" என்று கூறிக்கொண்டே, மடியிலிருந்து சில பட்டாசுக்கட்டுகளை என்னிடம் நீட்டினாள்.

"அம்மா, உனக்குப் பட்டாசு வாங்கப் பணம் ஏது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். "என்ன செய்வது இந்த வருடம் தீபாவளிக்கு உனக்குப் பட்டாசு வாங்கிக்கொடுக்க என்னிடம் பணம் இல்லை.

ராமுவின் அம்மா அவனுக்கு வாங்கி வைத்த பட்டாசுகள் சிலவற்றை உனக்குத் தந்து விட்டார்கள், நீயும் பட்டாசுகளை வெடிக்கச் செய்து தீபாவளியை மகிழ்ச்சியாகக் கொண்டாடு" என்றாள் அம்மா. நான் ராமுவின் அம்மாவை நன்றியோடு நினைத்தேன்.

– ஜெ. எத்திராஜன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- பல்வேறு விழாக்கள் குறித்துச் சிறுகுறிப்புகளுடன் ஒரு படத்தொகுப்பு உருவாக்குக.

✐ தீபாவளி வாழ்த்து அட்டை தயார் செய்து நண்பனுக்கு அனுப்புங்கள்.

| | |
|---|---|
| தீபாவளி நல்வாழ்த்து | அன்புள்ள......<br>என் இனிய தீபாவளி<br>நல்வாழ்த்துகள்<br>அன்புடன் |

✐ கீழே கொடுத்திருக்கும் கட்டங்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி பண்டிகைகளின் பெயர்களை எழுதுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீ | பொ | கா | ரீ | கி | ர |
| சா | ர் | பா | ம் | வ | ப |
| த் | ன் | ஸ் | ட | றி | க் |
| தி | து | ங் | ஈ | ம | தீ |
| கை | ளி | ஓ | ல் | க | ண |

✐ கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடையை வாசித்துச் சரியான இடத்தில் நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்துங்கள்.

ராமு பணக்காரக் கண்ணப்பனின் ஒரே மகன் அவன் விரும்பியதையெல்லாம் நிறைவேற்றத் தயாராக இருக்கிறார் கண்ணப்பர் பணக்கார வாழ்வைச் சொல்ல வேண்டுமா சொர்க்க வாழ்வுதான் யானை வெடி சீன வெடி வான வெடி என்றெல்லாம் பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்தான்.

| | | | | |
|---|---|---|---|---|
| . | , | ? | ! | " " |



அலகு 4

# காலத்தின் அருமை



காடுகளை அழித்தல், கிராமம் நகரமாதல், கழனிகள் காங்கிரீட் தளமாதல் முதலானக் காரணங்களால் காலநிலைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றைக் கண்டறிந்து பருவத்திற்கேற்ற தொழில்களைச் செய்ய வேண்டும். இது போலவே காலநிலைகளில் ஏற்படும் நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் தேவை.

# விண்ணும் மண்ணும்



## அப்பா உன்னைத் தேடுகின்றார்

மழையே மழையே வா வா வா
மகிழ்ந்து நானும் குளித்திட வா
உழவர் உழுதிட வா வா வா
ஊரார் உழைக்க நீயும் வா

அப்பா உன்னைத் தேடுகின்றார்
ஆகாயத்தில் பார்க்கின்றார்
எப்போதும் உன் நினைவாலே
ஏரை எடுத்து வைக்கின்றார்

மண்ணும் மலரும் மகிழ்ந்திடவே
மழையே நீயும் பெய்திடுவாய்
விண்ணும் இன்பம் கொண்டிடவே
விரும்பி நீயும் வந்திடுவாய்

மக்கள் ஆட்சி செய்திடவே
மண்ணில் வந்து பொழிந்திடுவாய்
துக்கம் துன்பம் ஒய்ந்திடவே
துரிதமாக வந்திடுவாய்

– கொற்றை வளவன்



## செயல்பாடுகள்

- அப்பா ஏன் வானத்தைப் பார்க்கிறார்? பாடலிலிருந்து விடையை எடுத்து எழுதுங்கள்.
- பாடலில் மழை பெய்வதன் நன்மைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை எடுத்து எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் உள்ள குழந்தை மழையில் நனைந்து விளையாடுகிறது. இதுபோன்ற உங்களது அனுபவங் களைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.

## வானிலை ஆய்வாளர்கள்

வானிலை சாதாரணமாக இருந்தால் எறும்புகள் நேர்க்கோட்டில் வரிசை யாகச் சென்று கொண்டிருக்கும். கனத்த மழை வரும் என்று தெரிந்தால், அவை வளைந்து வட்டமான பாதையில் வரிசையாகச் செல்லும். மேலும் அவை தங்கள் முட்டைகளை ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் சென்றால் பெரு மழை வரும்!





மேலே பறந்துகொண்டிருக்கும் தும்பி என்னும் தட்டாம்பூச்சி, மழை வரப்போவதை அறிந்து, கீழே பறக்கத் தொடங்கிவிடும்.

கனமழை வரப் போவதை வெகு நேரத்துக்கு முன்பே தெரிந்துகொண்டு தேனீக்கள் கூட்டுக்குத் திரும்பிவிடுகின்றன!





ஒரு கிராமத்தில் உள்ள சுண்டெலிகள் எல்லாம் ஒரே சமயத்தில் திடீரென்று மறைந்துவிட்டால், அப்பகுதியில் பூகம்பம் ஏற்படப் போகிறது என்று அறிந்து கொள்ளலாம்.

'ஆரஞ்சு லேடி பேர்ட்' என்னும் வண்டு வானிலையைச் சரியாக ஊகித்துவிடும்! மரத்திலேயே வாழும் அந்த வண்டு, கடும் குளிர்காலம் வரப் போவதைத் தெரிந்து தரையில் இறங்கிப் பதுங்கி விடும்!





வானிலை மோசமடைந்து புயல் உருவாகும்போல இருந்தால், நாய்கள் எங்கே சென்றிருந்தாலும் விரைந்து தாம் தங்கும் இடத்துக்கு வந்துவிடுகின்றன! நாய்கள் ஒரு இடத்தில் படுக்காமல் வட்டமிட்டுக்கொண்டிருந்தால் தென்மேற்குத் திசையிலிருந்து மழை வரும்!

– இணையச் செய்திகள்

## செயல்பாடுகள்

- பல்வேறு காலநிலைகளைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- மழை வரும் முன்பு பிராணிகள் செய்யும் செயல்களைப் பாடப்பகுதியை வாசித்துக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
  - தும்பி :..............................................................................
  - எறும்பு :..............................................................................
- செய்தித் தொகுப்பை வாசித்து அதில் வரும் இயற்கைச் சீற்றங்களை எழுதுங்கள்.


எனக்கு எதிரே யார்? கண்டுபிடித்து இணையுங்கள்

| | |
|---|---|
| • மேலே | வெளியே |
| • உள்ளே | இடம் |
| • வலம் | அங்கே |
| • முன்னால் | கீழே |
| • இங்கே | பின்னால் |

கீழ்க்காணும் கூற்றுகளுக்கு உரியவர்களைப் பாடப் பகுதியை வாசித்துக் கண்டுபிடித்து எழுதுங்கள்


- கனமழை வருவதை அறிந்து கூட்டிற்குள் திரும்பி விடும்
- தரையில் இறங்கிப் பதுங்கி விடும்.
- பூகம்பம் வரும் முன் திடீரென மறைந்துவிடுகின்றன.

படத்தைப் பார்த்துத் தொடர் அமையுங்கள்.


..........................................................................


..........................................................................


..........................................................................



..........................................................................


..........................................................................


..........................................................................



# காலப்பயிர்



## ஆடிப்பட்டம் தேடி விதை

கோடையில் வறண்டு கிடந்த நீர்நிலைகள் நிரம்பி, விவசாய நிலங்கள் குளிர்ந்து, அதில் புல் பூண்டுகள் முளைக்கத் தொடங்கும். ஆடி மாதத்தில் விதை விதைத்தால் அது வீரியமாக வளரும் என்பதை விளக்குவதற்குத் தான் நம் முன்னோர் **ஆடிப்பட்டம் தேடி விதை** என்றார்கள்.

ஆடி மாதத்தில் தரை குளிர்ந்திருப்பதால் புதர்களில் பதுங்கிக் கிடந்த பாம்புகள் வயலுக்குள் வரத் தொடங்கும். இதனால் பயிர்களை நாசமாக்கக் காத்திருக்கும் எலிகளைப் பாம்புகள் படையெடுத்து அழிக்கும். மற்ற மாதங்களில் நிலவும் காலநிலை பயிர்களுக்கு ஏற்றதல்ல. ஆடி மாதத்தின் காலநிலை பயிர்களுக்காகவே படைக்கப்பட்டது போலிருக்கும். கருகும் அளவுக்கு வெயிலும் இருக்காது. அழுகும் அளவுக்கு மழையும் இருக்காது. தொடர்ந்து சூடாக இருப்பதால், மண்ணில் விழும் மழைத்துளி அப்படியே உறிஞ்சப்படும். மண்ணில் நீர் அதிகமாகத் தேங்கி செடிகளை அழுகவிடாது. ஆனால் வேண்டிய ஈரப்பதம் நிச்சயம் நிலைத்திருக்கும்.

இப்படி ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து கிடப்பதால்தான் நாம் இன்னும் ஆடியில் விதைக்க ஆர்வம் கொள்கிறோம். எனவே ஆடிப்பட்டம் என்பது அர்த்தம் மிகுந்ததுதான்.

– விவசாயி

## செயல்பாடுகள்


- எல்லாக் காலங்களிலும் உணவுப் பயிர்கள் பயிரிடப்படு கின்றனவா? கலந்துரையாடுங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- ஆடிமாதத்தில் விதை விதைப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றி பாடப்பகுதியை வாசித்துச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
- தமிழ் மாதங்களின் பெயர்களைத் தொகுத்து வரிசைப் படுத்துங்கள்.

## உழைப்பின் அருமை!


கோடைக்காலம் அறுவடை முடிந்திருந்தது. வயல்களில் எங்கும் தானியங்கள் சிதறிக் கிடந்தன. வெட்டுக்கிளியொன்று ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் தன் விருப்பம்போல் தானிய மணிகளைத் தின்றது. அப்பொழுது எறும்பொன்று தானியத்தைச் சிரமப்பட்டு இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்த வெட்டுக்கிளி, "உன்னைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. எங்கும் ஏராளமான தானியங்கள் நிறைந்திருக்கின்றன. எதற்காக இப்படிக் கடுமையாக உழைக்கிறாய்? எந்தக் கவலையும் இல்லாமல் நான் மகிழ்ச்சியாக இல்லையா? என்னுடன் வா! நீயும் ஆடிப்பாடி மகிழ்ச்சியாக இரு" என்று கூறியது. அதற்கு எறும்பு, "நண்பனே! அடுத்துக் கடுமையான குளிர்காலம் தொடங்கப் போகிறது. இப்பொழுதே கிடைப்பதை எல்லாம் சேர்த்து வளைக்குள் பாதுகாக்க வேண்டும். இல்லையெனில் அந்தச் சமயத்தில் உணவின்றி வருந்த வேண்டியநிலை ஏற்படும். நீயும் வா! என்னுடன் சேர்ந்து உழைத்துச் சேமித்து வைத்துக்கொள். உனக்கும் நல்லது" என்றது.

அதன் பேச்சை வெட்டுக்கிளி அலட்சியப்படுத்திவிட்டது. மகிழ்ச்சியாகப் பறந்து திரிந்தது. சில நாட்கள் சென்றன.



கார்காலம் தொடங்கியது. உணவு தேடி எங்கெங்கோ அலைந்தும் கிடைக்காமல் வெட்டுக்கிளி பசியால் துடித்தது. அது எறும்பிடம் வந்து, "நண்பனே! பசி தாங்க முடியவில்லை. நீ சேமித்து




வைத்தவற்றில் சிறிது எனக்குத் தா" என்று கெஞ்சியது.

அதற்கு எறும்பு, "நீ உழைப்பின் அருமை தெரியாத சோம்பேறி. எதிர்க்காலத்திற்குச் சேமித்து வைக்க வேண்டும் என்று கூறிய என்னைக் கேலி செய்தாய். இப்பொழுதும் நீ மகிழ்ச்சியாக ஆடிப்பாடி இருக்க வேண்டியது தானே?" என்றது.

வெட்டுக்கிளி இப்போது சேமிப்பின் அருமையைப் புரிந்து கொண்டது.

– செவல் குளம் ஆச்சா

## செயல்பாடுகள்

- உணவைச் சேகரித்துக் கொண்டிருந்த எறும்பு வெட்டுக்கிளியிடம் கூறியவற்றை எழுதுங்கள்.
- கார்காலத்தில் பசியுடன் அலைந்த வெட்டுக்கிளிக்கும் எறும்பிற்கும் நடந்த உரையாடலைக் குறிப்பிடுங்கள்.
- சேமித்தல் குறித்துக் கலந்துரையாடி, உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் வினா வாக்கியங்களை எடுத்து எழுதுங்கள்.
- கீழ்க் காணும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.
    - கோடைக்காலம் – ..................... + ....................
    - நிறைந்திருக்கின்றன – ..................... + ....................
    - சிதறிக்கிடந்தன – ..................... + ....................



# காலம் பார்த்து.......!



## பரவும் டெங்கு

மழைக்காலங்களில் அதிகம் பரவுமா டெங்கு? பாதுகாப்பது எப்படி?

"டெங்கு வைரஸ்" என்னும் நுண்கிருமியால் டெங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது. இக்காய்ச்சல் பரவுதலுக்குத் தட்பவெப்பம் முக்கியக் காரணமாக அமைகிறது. மழைக்காலங்களில் இக்காய்ச்சல் அதிகமாகப் பரவும் தன்மை கொண்டது. இது ஈ.டி.எஸ். கொசுக்களினால் பரவுகிறது. இவ்வகைக் கொசுக்கள் கடிப்பதினால் டெங்கு வைரஸ் கிருமி இரத்தத்தில் கலந்து டெங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது

இவ்வகைக் கொசுக்கள் தேங்கி நிற்கும் தண்ணீர், மழைநீர், அன்றாடம் குடிக்க குளிக்கப் பயன்படுத்தும் தண்ணீர் ஆகியவற்றில் இனப்பெருக்கம் செய்கின்றன. இக்காரணத்தினால் மழைக்காலங்களில் டெங்குக் காய்ச்சல் அதிகம் பரவுகிறது. நீர் தேக்கத்தைத் தவிர்ப்பதால் மட்டும் இக்காய்ச்சல் பரவுவதைப் பெருமளவு கட்டுப்படுத்த முடியும். டெங்குக் காய்ச்சல் பாதித்த ஒருவரின் இரத்தத்தை உறிஞ்சிய கொசுக்கள், நலமாக இருக்கும் ஒருவரைக் கடித்தால் டெங்குக் காய்ச்சல் பரவும்.

இந்நோயால் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவே கொசுக்களின் தாக்கத்தில் இருந்து குழந்தைகளைக் காப்பது அவசியம். தோள்களில் தடிப்பு (சிவப்பு) அஜீரணக் கோளாறு, மூச்சு விடும்நிலை வேகமாகவும், பலவீனமாகவும் இருந்தால் மருத்துவ ஆலோசனையை உடனே பெற வேண்டும்.

– மருத்துவர் கோபிகா

## செயல்பாடுகள்

- பொதுவாக நோய்கள் பரவுவதற்குரிய காரணத்தைப் பாடப்பகுதி வாசித்துக் கூறுங்கள்.
- டெங்குக் காய்ச்சல் பரவாமல் இருக்க என்னென்ன செய்யலாம் என்பதைக் கலந்துரையாடி கருத்துகளைக் கூறுங்கள்/ எழுதுங்கள்.
- கீழ்வரும் சொற்களுக்கு இணையான சொற்களைத் தேர்வுசெய்து எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| • தட்பவெப்பம் | = | உள்ளிழுத்தல் |
| • பெருமளவு | = | காலநிலை |
| • பயன்படுத்துதல் | = | அதிகளவு |
| • உறிஞ்சுதல் | = | உபயோகித்தல் |
| • அன்றாடம் | = | நாள்தோறும் |

- கொடுக்கப்பட்டுள்ள இரண்டு தொடர்களை எடுத்துக்காட்டு போன்று இணையுங்கள்.

எ.கா : டெங்கு வைரஸ் நுண்கிருமிகள். டெங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது.

டெங்கு வைரஸ் நுண்கிருமிகளால் டெங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது.

- ஈடிஸ் கொசு கடித்தது. டெங்கு பரவியது.

  ...........................................................................................

- தேங்கி நிற்கும் தண்ணீர். இனப்பெருக்கம் நடைபெறுகிறது.

  ...........................................................................................

- நீர் தேங்குவதைத் தவிர்த்தல். காய்ச்சல் கட்டுப்படுத்தப் படுகிறது.

  ...........................................................................................

## உடலைக் காப்போம்

வெயில் காலத்தை விட பனிக் காலங்களில் நமக்கு அதிக அளவில் உடல் நலக் கோளாறுகள் ஏற்படுகிறது. நமது காது, மூக்கு, தொண்டைப் பகுதிகளைப் பனித் தாக்குவதால் மிகவும் சிரமத்திற்கு ஆளாக நேர்கிறது.

இரவு முதல் அதிகாலை வரையிலும் குளிரின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் மூச்சுத் திணறல், சளி, மூக்கடைப்பு, காதுவலி என பிரச்சனைகள் துவங்கும்.

பனிக்காலத்தில் பொதுவாகவே தொண்டைவலி ஏற்படும். அதற்கு எப்போதும் வெதுவெதுப்பான தண்ணீரையே குடிக்க வேண்டும். குளிருக்கு இதமாக கற்பூரவல்லி, தூதுவளை, கீரை ஆகியவற்றில் கஷாயம் வைத்து அருந்தலாம்.

குளிர்காலத்தில் அதிகம் பாதிக்கப்படுவது தோல் தான். குளிக்கும் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி ஆலிவ் எண்ணெயைக் கலந்து குளித்தால் தோல் பாதுகாக்கப்படும்.

பனிக்காலத்தில் குளிப்பதற்குச் சோப்புகளைப் பயன்படுத்துவதைவிட கடலை மாவு, பயத்தம் பருப்பு மாவு

### ஒரு சொல்லுக்குப் பல பொருள்

| | | |
|---|---|---|
| அணி | : | அணிகலன், குழு, அழகு |
| அடி | : | கீழ்ப்பகுதி, அடித்தல், பாதம், அளவை |
| அரவம் | : | ஒலி, பாம்பு |
| ஆறு | : | எண், நதி, வழி, அமைதியாதல் |
| இதழ் | : | பூவிதழ், உதடு |
| இடி | : | முழக்கம், தாக்கு |
| ஈ | : | கொடு, இரத்தல் |
| களை | : | நீக்கு, பயிருக்குக் கேடான புல் |
| கல் | : | பாறைக்கல், படி |
| கிளை | : | மரக்கிளை, உறவு |
| தை | : | தைத்தல், மாதம் |
| திங்கள் | : | மாதம், நிலவு, கிழமை |

ஆகியவற்றைத் தேய்த்துக் குளிக்கலாம்.

குளிர்காலத்தில் உட்கொள்ளவேண்டிய உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணவேண்டும்.



பனிக் காலங்களில் எண்ணெய்கள் மூலம் செய்யப்பட்ட பலகார வகைகளை அறவே ஒதுக்கிவிட வேண்டும்.

பழங்களில் சப்போட்டா, மாதுளை, ஆப்பிள் ஆகிய பழங்களைச் சாப்பிடவேண்டும். புளிப்புச் சுவை நிறைந்த பழ வகைகளைக் கட்டாயம் சாப்பிடக் கூடாது.

– மருத்துவர் அனுப்பிரியா

## செயல்பாடுகள்

- உங்களது குளிர்கால அனுபவங்களைக் கூறுங்கள்.
- குளிர்காலத்தில் நம் உடலில் எந்தெந்த உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன என்பதை எழுதுங்கள்.
    - ......................................................
    - ......................................................
    - ......................................................
- குளிர் அதிகமாகும் போது உடலில் ஏற்படும் பிரச்சினைகளை எழுதுங்கள்.
    - ......................................................
    - ......................................................
    - ......................................................

- கோடைக் காலத்தில் ஏற்படும் நோய்கள் எவை? அவற்றை எவ்வாறு தடுக்கலாம்?கூறுங்கள்.
- குளிர்காலத்தில் உடலிலுள்ள தோலைப் பாதுகாக்கும். வழிமுறைகள் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- குளிர்கால உணவு முறைகளைக் கட்டங்களில் எழுதுங்கள்.

| உட்கொள்ள வேண்டிய உணவுகள் | தவிர்க்க வேண்டிய உணவுகள் |
|---|---|
| • ........................................ | • ........................................ |
| • ........................................ | • ........................................ |
| • ........................................ | • ........................................ |

- கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

- வைரஸ் =
- ஐஸ்கிரீம் =
- சாக்லேட் =
- பிஸ்கட் =
- சோப்பு =

இனிப்புப் பண்டம்
நுண்கிருமி
பனிக்கூழ்
வழலைக் கட்டி
மாச்சில்

## ஓரெழுத்து ஒருமொழி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | – | பசு | தீ | – | நெருப்பு |
| ஏ | – | அம்பு | பூ | – | மலர் |
| கோ | – | அரசன் | போ | – | செல் |
| சீ | – | இகழ்ச்சி | மா | – | மரம் |



# அகரமுதலி

| | |
|---|---|
| அக்கணம் | – அந்த நேரம் |
| அடர்ந்த | – நெருங்கிய |
| அந்தி | – மாலை/சாயங்காலம் |
| அமர்ந்து | – உட்கார்ந்து |
| அர்த்தம் | – பொருள் |
| அருந்துதல் | – சாப்பிடுதல்/குடித்தல் |
| ஆமோதம் | – பாராட்டு |
| ஆய்ந்து | – ஆராய்ந்து |
| ஆர்வம் | – விருப்பம் |
| இடர் | – துன்பம் |
| இரகசியம் | – மறைவாய் |
| உகந்தது | – பொருத்தமானது |
| உடை | – ஆடை |
| உபதேசம் | – அறிவுரை |
| உரக்க | – சத்தமாய் |
| உள்ளம் | – மனம் |
| உற்று | – கூர்ந்து |
| உறுதி | – வலிமை |
| ஏக்கம் | – நிறைவேறாத ஆசை |
| ஏர் | – கலப்பை |
| ஏளனம் | – கிண்டல்/பரிகாசம் |
| ஒட்டி | – சார்ந்து |
| கணக்காய் | – சரியாய் |
| கதிரவன் | – சூரியன் |
| கழனி | – வயல் |
| களைப்பு | – சோர்வு |
| கன்னல் | – கரும்பு |
| காணும் | – பார்க்கும் |
| கார்காலம் | – மழைக்காலம் |
| கிண்டல் | – கேலி/நக்கல் |
| கொடுமை | – தீங்கு |
| சக்தி | – ஆற்றல் |
| சம்மதித்தல் | – ஏற்றுக்கொள்ளுதல் |
| சமீபம் | – அருகில் |
| சித்தம் | – மனம் |
| சிதறிய | – சிந்திய |
| சிரமம் | – கஷ்டம் |
| சீராக | – ஒழுங்காக |
| சுற்றம் | – உறவினர் |
| தர்பார் | – சபா மண்டபம் |
| தழைத்து | – செழித்து |
| தாக்கம் | – பாதிப்பு |
| தாழ | – கீழே |
| திகைப்பு | – வியப்பு/பிரமிப்பு |
| திங்கள் | – மாதம்/சந்திரன் |
| திலகம் | – சிறப்பு/பொட்டு |
| துரிதம் | – வேகம் |
| தூய்மை | – சுத்தம் |
| தெம்பு | – பலம்/தைரியம் |
| தேக்கி | – சேமித்து |
| தேகம் | – உடல் |
| தோன்றுதல் | – உருவாக்குதல் |
| நிதானம் | – கவனம் |
| நிம்மதி | – மன அமைதி |
| நுனி | – முனை/விளிம்பு |
| பணி | – வேலை |
| பிரஜை | – மக்கள் |
| புகழ்தல் | – பாராட்டுதல் |
| புடைத்தது | – வீங்கியது |
| புன்மை | – இழிவு |
| புன்னகை | – சிரிப்பு |
| பெருமழை | – பெரிய மழை |
| பேணுதல் | – பராமரித்தல் |
| பொலிவு | – அழகு |
| பொழிந்து | – பெய்து |
| மடல் | – கடிதம் |
| மாமதில் | – பெரிய சுவர் |
| மாளிகை | – பெரிய கட்டடம் |
| மிகுந்தது | – அதிகமானது |
| மீண்டும் | – மறுபடியும் |
| முக்கனி | – மா, பலா, வாழை |
| மேதை | – அறிவாளி |
| ருசி | – சுவை |
| வசித்தல் | – வாழுதல்/தங்குதல் |
| வண்ணம் | – நிறம் |
| வருத்தம் | – துயரம்/கவலை |
| வலிமை | – பலம் |
| வளிமண்டலம் | – காற்று மண்டலம் |
| விசும்பு | – ஆகாயம்/வானம் |
| வியந்தது | – ஆச்சரியப்பட்டது |
| விழைதல் | – விரும்புதல் |
| வீண் | – பயனற்ற |
| ஜீரணம் | – செரிமானம் |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச – கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## *சில கடமைகள்*

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12. தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring** : www.nireekshana.org.in*